மெய்ஞ்ஞானத் திறவுகோல்

ஸ்ரீமத் ஞானக்கொடி பாவா
இயற்றியவை.

8372

மெய்ஞ்ஞானத் திறவுகோல்

ஸ்ரீமத் ஞானக்கொடி பாவா

இயற்றியவை.

கல்வத்தியா ஞானச்சிரமம்,

நம்புதாளை.

PRINTED AT
THE RAJAN PRESS,
MADURA—1947.

அணிந்துரை.

'எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்' (பொதுமறை)

வெண்பா.

முத்திதரும் வேத முழுமுதலைக் கண்டுவக்கப்
பத்திதரும் சொல்லாற் பகர்ந்தனரால்—வித்தகமெய்
ஞானத் திறவுகோல் நன்னூ லிதைப்புவியில்
ஞானக் கொடியடிகள் நன்கு.

உலகிடை நிலவும் பல்வகைப் பாஷையுள்ளும் சீரிய சிறப்பும், பயில்வோர்க்கினிமை பயக்கும் பாரிய பண்புமமையப்பெற்றது பைந்தமிழ் மொழியே யென்பது வெள்ளிடை விளங்கல். இவ்வரும் பைந்தமிழ் மொழியான் ஆன்றோர்களா லாக்கப்பெற்ற நூற்களெண்ணிறைந்தன. அவற்றுள், 'அறம் பொரு ளின்பம் வீடடைதல் நூற் பயனே, எனக்கூறிப்போந்த பெரியார் வாக்கிற் கிலக்காயமைந்தவை நனிமிகச் சிலவே. அவ்வணமன்றி, காலப் போக்கான் எவ்வியெழுந்த நூற்கள் பற்பல. அவற்றுள் தோத்திரப்பாமாலை, கீர்த்தனப்பாமாலை, கீதாமஞ்சரி, குகநாமகீதம் எனப்பனுவல்கள் பலவற்றைப் பரக்கக்காணலாம்; அதனுள் சிலவே இலக்கிய விலக்கண வரம்பிற் கேற்புடைத்தாய் மிளிர்கின்றன. மற்றைய பிழைமலிந்து கற்றவல்லுநர் உளத்தைக்கலக்கலோடு தமிழ்மொழிக்கோரிழுக்கையு மதன்பெற்றியையு மழிக்குந் தகையவாயுள்ளது.

நூல் எனிலோ, சதுர்வித புருடார்த்தங்களைத் தழீஇ, பதி, பசு, பாசம் பான்மையைத் தெள்ளிதின் விளக்கித் தன்னையுந் தலைவனையு முணர்த்தி, சச்சிதானந்த வாழியி லாழ்த்தி கழிபேருவகையை யளிப்பதே யாகு மென்பது சாலச்சால்பு.

அவ்வழி நின்ற பெரியார் எமது அரும்பதி ஸ்ரீமத் ஞானக்கொடி அடிகள் திருவாய் மலர்ந்தருளிய 'மெய்ஞ் ஞானத் திறவுகோல்' எனும் இவ்வரிய நூலை முத்திக்கணித் தாய சன்மார்க்கப் போதனையைத் தெரிப்பதாய் எல்லாம் வல்ல (அல்லா'ஹ்') இறைவன்பால் பக்திச்சுவைச் சொட்டச் சொட்டப் பாடியுள்ளாரென்பது படிப்போர்க்கே இனிது புலனாகும். மற்றும் வேதாந்த ரகசிய உண்மைப் பொருள்களை யுள்ளவாறுள்ளத்தே பசுமரத்தாணியெனப் பதியுமாறு இனிய சந்தப்பாக்களில் வெள்ளிய நடையிற் பொறித்தமை போற்றற்கும் புகழற்கு முரியனவாம்.

ஸ்ரீமத் அடிகளின் அரியவாக்குகளிலமைந்துள்ள விழுமிய வோசையும், கெழுமிய பொருளும், தத்துவத்தி னுண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியென எடுத்துக் காட்டும் அருத்தாபத்தியின் விசேடமும், செறிந்தாங் கொளிர்கின்றன எனல் மிகையாகா. ஆகலின் பக்தி வழி நின்ற வன்பர்குழாம் பனுவலைப்படித்து மகிழ்வெய்தி நித்திய நின்மல நிராலம்ப நிர்விகார நிஷ்ப்ரபஞ்ச கருணாகர மூர்த்தியாம் அல்லா(ஹ்) வின் பேரருளைப்பெற்று நெடிதுநா ளுய்யுமாறு பரிவுகூர்ந்து விழைந்து கேட்டுக் கொள்ளுகின்றனன்.

நம்புதாளை,
18—12—47.

இன்னனம் அன்பன்
மு. மு. முகம்மது சாலிஹ்.



SRIMATH GNANAKKODI BAWA

NAMBUTHALAI.

ஓம்.

திருத்தருப்பூண்டி, "கவிக்களஞ்சியம்"
திரு. A. R. கோபாலசாமிப் பாவலர் அவர்கள் கூறிய
சாற்றுப்பா.

ஆசிரியம்.

சீர்மேவு நம்புதா ளைப்பதியி லுறைகின்ற
　　செப்பருஞ் சீல ஞான
　திப்பிய வருங்குணக் குன்றனைய வொப்புளான்
　　தேசிகியெனு யோகி யாவான்
கார்மேவு மும்மலக் கட்டறுத் தேஞானக்
　　கதியோரு மதி வல்லவன்
　கண்டனவெ லாமோன மென்றுபுகல் யூகியாம்
　　கருதருஞ் சுருதி நெறியான்
பார்மேவும் முக்கனி ரசம்பாகு கற்கண்டு
　　பைந்தே னெனப் பகரவே
　பரிவுடன் மெஞ்ஞானத் திறவுகோ லெனுநூலைப்
　　பண்பா யமைத்த ளித்தான்
பேர்மேவும் உயர்ஞானக் கொடியடிக ளென்னவே
　　பிறங்கியல் போங்கு சுகிர்தன்
　பிரபஞ்ச மீதினி னிரஞ்சன னருள்பெற்று
　　பெரிதுவந் துய்யும் மன்னே.

விருத்தம்.

திருவளர் மாடத் தெழின்மிக வோங்கும்
　　திகழ்நம்பு தாளையின் வதிவோன்
கருவளர் கருத்தன் கதிதனை யலாது
　　கருதுறு முனிதநற் சிதவான்

உருவளர் வனப்பா னொழுக்கமே பூண்டோ
னுயர்குண மலையென வுறழ்வோன்
மருவளர் ஞானக் கொடியுடை மஸ்தான்
மதிநலத் தூயவன் காணே.

கட்டளைக் கலித்துறை.

படியடி கண்ட பகவா னடிக்கணி பண்ணிசையாய்ப்
படியடி கொண்ட மெய்ஞ்ஞானத் திறவுகோல் பண்பினின்
னூல்
படியடி விண்டா னமலனற் றுளைப் பதியின்ஞானப்
படியடி நின்று னறிவுத் துவசப் பதவியனே.

மதுரை ராஜன் பிரஸ் மானேஜர்

R. அழகர்சாமி அவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பா.

எத்தனையோ சாத்திரங்கள் இன்றுமா ராய்ச்சிசெய்தும்
அத்தனைக்கும் மேலாக யாம்புகழ்வாம்—உத்தமராம்
ஞானக் கொடிபாவா நல்கும் உயரியமெய்ஞ்
ஞானத் திறவுகோலை நாடி

மோனப் பொருள்தனை முற்று முணர்ந்திட
ஞானக் கொடிபாவா ஞாலமிசை—ஞானத்
திறவுகோ லென்னுமோர் திவ்யநூ லீய்ந்தார்
திறமைபெறப் பெற்றிடுவோம் தேர்ந்து.

|

நிராம்ஸமே நாம்.

மெய்ஞ்ஞானத் திறவுகோல்.

இறை வணக்கம்.

கோளிற் பொறியிற் குணமிலவே யெண்குணத்தன்
றாளை வணங்காத் தலை. (குறள்)

விருத்தம்.

எவனுயிர்க் குயிராய் யெள்ளுமெண் ணெயும்போ
லெங்கணும் நிறைந்தமெய்ச் சோதி
எவனகம் புறமா யிலங்குவா னொருவ
னியக்குமுப் பாழினைக் கடந்தோன்
எவனிக பரத்து மியம்பரும் பொருளா
யேகதத் துவனெனு முடிவான்
எவனவ னெளியே னிதயமா மலரி
னிருந்தருட் டுணைபுரி வோனே.

குரு வணக்கம்.

வெண்பா

பொற்புருவான் ஞானப் புகலிடமாய்ப் போற்றரிய
சற்குருவாந் தன்னையுணர் தன்மையுளா—னற்குருவாம்
கஞ்சத்தா ளையன் கழலைப் பரவிநிதம்
நெஞ்சத்தே வைத்தேன் நிசம்.

விருத்தம்.

பார்பூத்த பரம்பொருளின் பதத்தை யுன்னி
பதிபசுபா சத்தினியல் பகுதி தேர்ந்து
கார்பூத்த மலக்குறும்பின் களையைத் தெற்றி
கதிக்கினிய நெறியுடையான் கசடி லாதான்
பேர்பூத்த செய்குநெய்னு முகம்ம தென்னும்
பிரபலிய னென்குருவின் பிறங்குந் தாளை
நேர்பூத்த வென்சிரத்தி லேற்றி யேற்றி
நிதநிதமும் பணிந்தனனு னேர்மை யானேன்.

ஆசிரிய விருத்தம்.

வீரனெனும் மெய்ஞ்ஞான தியாகியென முரசறையும்
வீரமொன் றருள் புரியவும்
விரிகருணை பொழியுமருள் ஞானவா ரிதிமூழ்கு
மேன்மையெற் கருள் புரியவும்

தீரனெனுந் திடஞான நிலைபெறும் நன்னிட்டைத்
தீரமொன் றருள் புரியவும்
சித்தவை ராக்கியம் வைத்தநிலை குலையாது
திறப்படற் கருள் புரியவும்

சூரனெனத் தண்டாயு தங்கொண்டு பொறிகளைச்
சூராட வருள் புரியவும்
சுத்தசை தன்யமாய்ச் சும்மா விருக்கசுக
சூக்ஷமொன் றருள் புரியவும்

மாரு வருங்கருணை மவுனகுரு நாதனே
வரவேண்டுந் தாளைப் பதியே
மாசிலா கமலாச னம்வாழுந் தேசிகா
மருபூபு சுபுஹானி யே.

அவையடக்கம்

வெண்பா.

கல்விக் கடலைக் கடக்கற் கறிவிலான்
நல்வினையாக் கொண்ட நயம்போலப்—பல்விதத்தும்
பண்பில்லே ஞசான் பரிவருளாற் றீட்டினனீ
தின்பமெனக் கொள்வீ ரினிது.

நூல்

ஆசிரிய விருத்தம்.

கங்குகறை யற்றபர மானந்த வெள்ளமே
கருணையா னந்த பொருளே
கலகலென முரசறையு மாகம புராணகலை
காணு து கண்ட பொருளே
அங்கிங் கிலாதெங்கும் பூரண வகண்டமாய்
அருவுருவ மான பொருளே
அன்பருக் கன்பனு யனுதினமும் மெய்ஞ்ஞான
வமுதளிக் கின்ற பொருளே
எங்கெங்கு தோன்றினும் நின்வடிவ தீதமாய்
இலங்குமெய்த் தனிய பொருளே
ஏதேது வென்னினு மேதேது வுன்னினும்
எட்டாத வினிய பொருளே

தங்குபே ரின்பசுகம் நின்வசம தாகையால்
தமியனேற் கருள் செய்குவாய்
சமரச தயாளமாய் விமலதத் துவமான
சாக்ஷாதி பிரம முதலே.

ஆனந்தக் களிப்பு

கலிவிருத்தம்.

ஆனந் தக்களிப் பானவிந் நூலிதைத்
தானந் தவமிலாத் தமியனு மோதினேன்
மோனந் தருநெறி மூவா முதல்வனே
ஈனந் தவிர்த்தெனை யென்றுங் காப்பையே.

பூலோகப் பூட்டைத் திறப்போம்—நாம்
பூர்வீகக் கோட்டையில் கொடிபோட் டிருப்போம் ()

1 ஆதி பராபரங் காப்பாம்—மெய்
யன்பர்கள் சற்ஜன சங்கமுங் காப்பாம்
சோதி சுடரொளி காப்பாம்—ஒரு
சோதனை யில்லாத் துறையருள் காப்பாம் (பூ)

2 அறுவகை யாதார பூட்டு—அங்கு
ஆச்சர்ய நிர்மல சாவியைப் போட்டு
திறக்கலாம் ஜெகஜால ரோட்டு—காணும்
திரிசியங் கடந்தாங்கே தெளியலாம் நாட்டு (பூ)

3 பூரணப் பொருளைப் பூசிப்போம்—பிரியா
போதமெஞ் ஞானக் கொடிபோட் டிருப்போம்
காரண காரியந் துறப்போம்—இனிய
கற்பக விருக்ஷத்தின் கனிகொய்து புசிப்போம் ()

4 கங்கு கறையற்ற சாக்ஷி—மனக்
கலக்கமில் லாமலே தெளிவோமே மீக்ஷி
அங்கிங் கிலாதென்ற சூக்ஷி—நல்ல
அறிவா லறிந்து வுணர்வதே சாக்ஷி (பூ)

5 சுருதிகள் சோபனச் சோலை—இது
சூஸ்திர கற்பகக் களியாட்ட சாலை
துரியமாய் வைத்தாங்கே காலை—ஞானத்
துறவற மாகவே பூசிப்போம் தாளை (பூ)

6 மெஞ்ஞான மேள முழங்கும்—வெகு
மேன்மைய தாகிய ஜோதி துலங்கும்
அஞ்ஞான விருளு மகலும்—அருள்
ஆனந்த வாரியை யடுத்துத் திகழும் (பூ)

7 முப்பாழ் கடந்ததே முத்தி—அந்த
முச்சுட ரானதே காரண சித்தி
அப்பாழ் விடிந்ததே வெற்றி—தூய
அதீதத்தில் மாசறக் கலப்பதே புத்தி (பூ)

8 ஈமா னீமானென்று சொல்வார்—சுத்த
ஈமா னிருக்குந் தலமேதுங் கொள்ளார்
ஆமான தன்னை யறியார்—இந்த
ஆலத்தில் பலகோல மாகத் திரிவார் (பூ)

9 வாசி வாசியென்று சொல்வார்—அந்த
வாசியின் சூக்ஷத்தை விளங்க வறியார்
தேசி நடையென்று சொல்வார்—தன்னில்
தீய குணங்களை மாற்றவு மறியார் (பூ)

10 மாளா மருந்துகள் வேண்டும்—நல்ல
மாத்திரை கண்டு பிடிக்கவும் வேண்டும்
மாளாமல் மாளவும் வேண்டும்—மண
மாப்பிள்ளை யானாலோ வாய்த்திடுங் காணும்(பூ)

11 நீர்மேற் குமிழியிக் காயம்—இந்த
நிலைபெறாக் காயத்தில் தனையறி ஞாயம்
பாரினில் நமக்கென்ன தாயம்—முப்
பாழான தேகங் கடந்தால் சகாயம் (பூ)

12 ஆசை யெல்லாம் பாசநாசம்—மேலைக்
காளாக வொட்டாதே யதுவல்லோ மோசம்
ஈசன் திருவடி நேசம்—வைத்து
இழிவான வஞ்ஞானம் துறந்தாலே வாசம் (பூ)

18 சாக்கரம் சொப்பனஞ் சுழுத்தி—அப்பால்
தனித்த வறிவை யுணர்வாய் செலுத்தி
போக்கு வரவை யகற்றி—தற்
போதந் தலையெடுக் காம லகற்றி (பூ)

14 சிந்தையின் பாசத்தைப் போக்கு—மனம்
சிதையாத நிலைமையி லுறுதியாய் நோக்கு
அந்தண ரறிவுநல் வாக்கு—என்று
ஆலோசனை செய்து வஞ்ஞானம் போக்கு (பூ)

15 இல்லறந் துறவற மொன்றே—அந்த
இணக்க மறிந்து துறப்பது நன்றே
அல்ல லகன்றிடு மன்றே—உந்தன்
அகத்தாசை புறத்தாசை யகற்றிடு மின்றே (பூ)

16 ஈராறு கொம்புள்ள மானே—அது
இருந்து விளையாடும் மாளிகை தானே
ஆராரு மறியாத தேனே—யதை
அறிந்து தெளிவது அறிவினில் தானே (பூ)

17 கலிமாவில் கலந்துமே பாரு—அந்த
ஹா-ஹூ-ஹீ என்றவோர் காரணந் தேறு
சலியாது நீநின்று காரு—மூலா
தாரத்தில் முன்பின்னில் லாமையம் பாரு (பூ)

18 கடலைக் கடக்கவே வேணும்—ஞானக்
கடலி லிறங்கவை ராக்கியம் வேணும்
திடலைத் தொடுக்கவே வேணும்—அங்கே
ஜெகஜால வித்தை யனேகங்கள் காணும் (பூ)

19 மனத்தைத் துறக்கவும் வேண்டும்—மோன
மவுனத் திருக்க வைராக்கியம் வேண்டும்
சினத்தை யறுக்கவும் வேண்டும்—அந்த
தீக்ஷையினால் மோக்ஷ சாபல்யந் தோன்றும் (பூ)

20 நாதமுங் கீதமு மாங்கே—ஞான
நடராஜர் நடனம் புரிவது மாங்கே
நாதாக்கள் சேனையு மாங்கே—மேலே
நாடிக்கை கொண்டவர் நாட்டமு மாங்கே (பூ)

21 தௌஹீது அறியாதான் சண்டி—சகல
சாஸ்திரங் கற்றாலு மவனேபேய் மண்டி
மவ்டிகப் பொய்வேட வண்டி—பூட்டை
மாற்றித் திறந்தாலே யறியலாங் கண்டி (பூ)

22 தவ்ஹீது வழிநடந் தேறு—கெட்ட
தானென்ற வாணவந் தடுத்துமே தூறு
தவசிகள் சவகாசஞ் சாரு—சுத்த
சைதன்ய சுகவாரி சூழ்ந்திடும் நேரு (பூ)

23 வெட்ட வெளியான கோட்டை—வெகு
விகசித மாகிய வேதாந்த வீட்டை
தட்டினால் திறக்கலாம் நாட்டை—எங்கும்
சச்சிதா நந்தமாய் விளங்கலாம் வேட்டை (பூ)

24 அன்பர்க்கு மடியார்க்கும் வாழி—ஞான
அருள்பெற்ற பெரியோர்க்கும் அறிவோர்க்கும் [வாழி
சன்மார்க்க போதர்க்கும் வாழி—யதை
சார்ந்தோர்க்கெல் லாமென்றும் வாழி நீடூழி (பூ)

ஆசிரிய விருத்தம்.

கலையாயி ரங்கோடி கற்றென்ன வுலகெலாங்
கைகுவித் தாடி யென்ன
கார்கொண்ட மேகத்தை வாகா யழைத்துவெகு
கனமாரி பெய்து மென்ன
அலைமோதுங் கடல்மீதி னடந்தென்ன பறவைபோ
லாகாயம் பறந்து மென்ன
ஆரூட சோதிடங் கற்றென்ன பாரினி
லரியகுறி சொல்லி யென்ன

விலையிலா மாளிகை கட்டியே யிருந்தென்ன
வீரராய் விளங்கி யென்ன
வெகுகால வரைகற்ப முறையுண்டு ஜீவித்து
மேன்மையா யிருந்து மென்ன
அலையுமன மாயையை யகற்றியொரு நிலைநிற்ப
வறிவையெற் கின்று புகலாய்
அகிலாண்ட லோகமும் புகழோங்கு தெய்வமே
அன்பருறை நடன பதியே

ஆனந்தக் களிப்பு

முத்தியின் மார்க்கத்தைக் கேளீர்—பேசா
மோன சுபாவத்தில் மாளாமல் மாளீர் (மு)

1 ஆளுங் குருபரன் காப்பு—பர
மானந்த மாகிய வான்றோர்கள் காப்பு
சூழுஞ்சற் ஜனங்களுங் காப்பு—வல்ல
தூய மகுபூபு சுபுஹானி காப்பு (மு)

2 ஹக்கை ஹல்கிலொன்றாய்க் காணே—திரு
மக்க முஹம்மதர் சொன்னசொற் றூனே
சக்கு சந்தாபங்கள் வீணே—விட்டு
சர்வமுந் தானான தகைமையைப் பூணே (மு)

3 கெட்டசு பாவத்தை யோட்டு—வருங்
கேடான வைம்புல விபகாரந் தாட்டு
மட்டிக் குணங்களை மீட்டு—நல்ல
மாதவஞ் செய்திட வாய்த்திடும் ரோட்டு (மு)

4 கருவி கரணங்க ளோடு—கூடிக்
கலவாமல் மனமற்ற சலாமத்தை நாடு
நிருமல மாய்நிட்டை கூடு—வரும்
நினைப்பு மறப்பும் பிணைப்பற்றுப் போடு (மு)

5 நிற்குண வாசமே நேரு—இந்த
நிதியாசை சதமல்ல நீயெண்ணிப் பாரு
அற்பர்க்கு வாராது சீரு—இதை
ஆராய்ந் தறிந்து தெளிந்துநீ தேரு (மு)

6 தன்னைத் தியாகம்செய் வாயே—நம்ம
தலைவ னுடன்கூடிக் கலந்திருப் பாயே
இன்னுமொன் றெண்ணாதே நீயே—சர்வ
இச்சை யில்லாம லில்லந்துறப் பாயே (மு)

7 எண்ணிடு மெண்ணங்கள் பொய்யே—உன்னில்
எட்டாத வகமியம் மௌனத்தில் வையே
அன்னிய நிலைகளைக் கொய்யே—அருள்
ஆனந்த ஜோதி துலங்கிடும் மெய்யே (மு)

8 பல்லுயிர் ஒன்றெனப் பாரு—ஆலம்
பலகோல் மாறனு மொருசூலாம் தேரு
அல்லிராப் பகலற்ற ஊரு—நல்ல
ஆசானைக் கேட்டு வறிவாயிவ் வாறு (மு)

9 முக்கோண வீதியின் மேலே—ஓதும்
முன்னூலை யறிந்து வுணர்வாயீ தாலே
சக்கற்ற சாயுஜ்ய சாலை—வரும்
சந்தானம் நமக்கிந்த தருணமிவ் வேளை (மு)

10 அத்து விதஞானந் தானே—மன
மசையாத சிவராஜ யோகத்தில் மானே
முத்தா யிலங்கிடும் கோனே—அந்த
மூலப்பி ராணனைத் தெரிசிக்கத் தானே (மு)

11 நன்மனத் தோர்புகழ் நாடு—திரு
நம்பு தாளைப்பதி சற்குரு வீடு
நன்னய மாய்நிட்டை கூடு—செய்கு
நய்னு முகம்மது தாளையே தேடு (மு)

ஆசிரிய விருத்தம்.

அட்டமா சித்தியை வசமாக்கி யேவெகு
மற்புதச் சித்தாட லாம்
அக்கினி குண்டத்தில் கடுங்கனல் மூட்டியே
யனல்மீ திறங்கிவிட லாம்

திட்டமா யிந்திர ஜெகஜால முறைகற்று
செல்வமும் பலதேட லாம்
திவ்யமுடன் ரசவாத வித்தைகற் றுளலாம்
திரிகால மும்பேச லாம்

சட்டமா மணிமந்த்ர மோதியே ஜெபிக்கலாம்
சதுர்மறைப் பறைசாற்ற லாம்
ஜகமுழுதும் நிகரிலா வரியபே ரோங்கலாம்
சபைமகிழக் கவிபாட லாம்

கட்டடங் காதவிப் பிரபஞ்ச வாதனை
கடத்தியரு ளின்றுபுரி வாய்
கங்குல்பக லற்றபதி யெங்குமாம் பூரணக்
கருணா காக்கடவு ளே.

ஆனந்தக் களிப்பு

ஆண்டவனை நம்பினேனே—நம்மை
ஆதரித் தானந்த வருள்தரு வானே (ஆ)

1 அள்ளிப் புசித்திடு வோமே—என்றும்
அழியாத வேதாந்த வெள்ளத்திற் றூமே
குல்லும் சமதான தாமே—இந்த
குணத்தை யறியவே கோரினோம் யாமே (ஆ)

2 திக்கற்ற சிவயோகந் தானே—மனந்
தேர்ந்திடும் சந்தான சாயுச்யந் தானே
பக்குவ வரைநின் றுதானே—தன்னை
பக்குவ மானபின் பதுங்கிடத் தானே (ஆ)

3 பட்டிப் பசுவையுங் கட்டி—நல்ல
பாற்பசு தன்னைப் பரத்தில்விட் டோட்டி
சுட்டிக் குணங்களை மாற்றி—ஒரு
சுட்டற்ற வெல்லையை மௌனத்தில் தோற்றி ()

4 அறிவிற் கெட்டாதமெய்ஞ் ஞானம்—அருள்
ஆனந்த வாரியை யடுப்பது மோனம்
அறிவற் கரிதான பானம்—தன்னை
ஆர்வ முடனே புசித்திட வேணும் (ஆ)

5 தூல சரீரத்தைச் சுத்தி—காணும்
சூச்சும காரண திரிலோகப் பத்தி
ஆளுங் குருபர னெத்தி—மனம்
அசைவற்ற நிலைமையில் திடமாக நத்தி (ஆ)

6 தானென்ற ஆண்மை தடுத்தேன்—வீண்
சஞ்சல மான சலனம் விடுத்தேன்
வீஞ்ஞை வினையெலாங் கெடுத்தேன்—வேத
வேதாந்த சாகரம் விளங்கி யடுத்தேன் (ஆ)

7 சாதனை ஞானந் தொடுத்தேன்—கெட்ட
சல்லிக் குணமான சகவாசம் விட்டேன்
வாதனைச் சுழலை யெரித்தேன்—வரும்
வாகான வானந்த வருளை யடுத்தேன் (ஆ)

8 கண்டங் கடத்தேற நாடி—இந்தக்
காயா புரிக்கோட்டை கைவச மாடி
எண்டிசை யுந்தொழத் தேடி—அங்கு
எட்டியு மெட்டாத வின்பத்தை நாடி (ஆ)

9 அஞ்செழுத் தாகிய மாடி—அங்கே
ஆனந்தத் தேனை யருந்திட நாடி
பிஞ்செழுத் தானதைக் கூடி—மிகப்
பிரியத் துடனேயான் பூசித்து நாடி (ஆ)

10 கலிமாவின் சூக்ஷத்தைக் கண்டு—ஒரு
கங்கு கரையற்ற பேரின்ப முண்டு
விழியருள் நோக்கியே நின்று—வேத
வேதாந்த ரகசியம் விளங்கிட வென்று (ஆ)

11 மண்டப முள்ளறை விண்டு—அங்கே
மங்காத ஜோதியை மவுனத்திற் கண்டு
தண்டம் பணிந்திட நின்று—நல்ல
சந்தான சாயுட்சந் தருவானே யென்று (ஆ)

12 ஓட்டைக் குரம்பை யடைத்தேன்—அங்கே
ஊரித் திகழுங் துடக்கைத் துடைத்தேன்
ஆட்டும் மனத்தைப் பிடித்தேன்—என்றும்
அழியாத வானந்த வருளைத் தொடுத்தேன் (ஆ)

13 வாய்மந்தி ரத்தினு லாமோ—வீணுய்
வாய்மதம் பேசிடில் வாய்த்திடு மாமோ
பேயர்க்கு ஞானமுண் டாமோ—என்றும்
பேராசை விட்டுப் பிரியமாய் நாமோ (ஆ)

ஆசிரிய விருத்தம்.

ஜெகமாயை மாயவும் சிவயோக முய்யவும்
சிந்தைவச மாவ தென்றோ
சிற்பரா காயமே யிப்புவியி னேயமாய்
சேயனுக் கருள்வ தென்றோ

சுகவாழ்வு பெற்றுள மகம்பாவ மற்றடிமை
சும்மா யிருப்ப தென்றோ
சுருதிமுடி வானதொரு கருதரிய நின்கழலைத்
துதித்துப் புகழ்வ தென்றோ

அகம்புறமு மொன்றாகி மாசற்ற வெளியிலே
யசைவற்று நிற்ப தென்றோ
அல்லையுந் தொல்லையும் வல்வினை யனைத்தையு
மறவொழிந் திடுவ தென்றோ

ஜகமுழுதும் நின்செயலே யல்லாது வேறதோ
தனயனுக் கருள் புரிகுவாய்
சமரச தயாளமாய் விமலதத் துவமான
சாக்ஷாதி பிரம்ம முதலே.

ஆனந்தக் களிப்பு

மதிமோசம் போகாதே மனமே—பொய்
மாயா விநோதத்தை மாற்றிக்கொள் தினமே

1 சத்தியந் தவறிட லாமோ—நாம்
சாயுஜ்ய பதிசாரா திருந்திடலாமோ
பக்தியை மறந்திடலாமோ—இந்தப்
பாரினில் மூவாசைப் பற்றிடலாமோ (மதி)

2 பாரினிற் பாவம் செய்யாதே—இன்னும்
பற்பல தொல்லையில் பாசம் வையாதே
சாருந் திடஞான மீதே—ஜென்ம
சாபல்யம் வாய்ந்திடும் தப்பாதப் போதே (மதி)

3 துற்குணத்தை விட்டுப்போடு—நல்ல
சுருதிகள் சொன்னதை யுறுதியாய் நாடு
அற்ப ருறவை விட்டோடு—உன்னில்
ஆனந்தமாகிய வருளோடு கூடு (மதி)

4 நாவு ருசிக் கலையாதே—வெறி
நாய்போ லலைந்து வீண்காலம் போக்காதே
மேவும் பேராசை பொல்லாதே—இந்த
மேதினியில் மாய வலையிற் சிக்காதே (மதி)

5 உலுத்த மலப்பாண்டக் கூடு—சற்று
உற்றுப் பார்த்தால் நாற்ற மூத்திரவோடு
சலித்த சஞ்சலமான மேடு—இதைச்
சாராது சார்ந்தாலே சாயுஜ்ய வீடு (மதி)

6 புழுக்கக் குணம்விட்டுப் போடு—நல்ல
புத்தியி ஞுன்னை பூசித்துக் கூடு
அழுக்கைத் துடைத்தாங்கே தேடு—அந்த
அறிவை யறிந்தாலே பேரின்ப வீடு (மதி)

7 வஞ்சம்பொய் சூது செய்யாதே—பெரும்
வாதனை கொலைகள் களவு செய்யாதே
கஞ்சா வர்க்கங்கள் கொள்ளாதே—இந்த
கற்பனையிற் சிக்கி மாட்டிக் கொள்ளாதே (மதி)

8 உண்டுடுத் திப்பூண்டு லாவி—தன்னில்
உற்றதெல்லாம் வாரி வயற்றிற் சுலாவி
வண்டத் தனங்களை மேவி—வீணில்
வாய்மதம் பேசாமல் தனியோனைச் சேவி (மதி)

9 பாச பந்தங்களா லென்ன—இந்த
பாவனையால் வரும் லாபங்களென்ன
ஆசாபா சங்களா லென்ன—இந்த
ஆலமெலா மரசாண்டாளு மென்ன (மதி)

10 உப்புக் குறுத்தான காயம்—இதை
உற்றுணர்ந்தேபார்த் துணர்வா யுபாயம்
இப்புவி வாழ்வென்ன ஞாயம்—என்றும்
ஏகபரா பரமாவதே நியாயம் (மதி)

11 கானல் ஜலம்போன்ற காயம்—இந்த
கணக்கை யறியாமல் போகாதே மாயம்
ஞானக் கொடிகண்டால் ஞாயம்—என்றும்
நற்குணங் குடிகொண்ட நாட்டமே நேயம்(மதி)

12 சத்திய சன்மார்க்கம் பாரு—சாது
சற்ஜன சங்கப் பழக்கத்தில் சேரு
முத்திவை ராக்கியம் தேறு—திரு
மூர்த்திகள் வழிகண்டு தெளிவாயிவ் வாறு (மதி)

13 சித்தர்க்கும் பக்தர்க்கும் வாழி—சிவ
தேசோ மயாநந்த சீலர்க்கும் வாழி
முத்தர்க்கும் முதியோர்க்கும் வாழி—மேலோன்
மோக்ஷத் திருப்போர்க்கும் வாழி நீடூழி (மதி)

பராபரக்கண்ணி

1 ஆதி பரமே அஹதாய் நிறைந்தவனே
சோதி சுடர்மணியே தூயோய் பராபரமே

2 உன்னை யறிவதற்கோ ருற்பனத்தை நானறியேன்
தன்னை யறியும்வகை தந்தாள் பராபரமே

3 ஆலமரம் வித்திற்குள் ஆர்ந்திருந்த வாறதுபோல்
கோலமான சித்துருவாங் கோனே பராபரமே

4 அங்கிங்கெ ணாதபடி யாகமத்தி னேகாந்தம்
சங்கை நெறியுணர்வைத் தந்தாள் பராபரமே

5 சாஸ்திரங்கள் கற்றும் சதுர்மறைக ளோதினுமென்
சூஸ்திரத்தைப் பார்த்தால் சுகங்காண் பராபரமே

6 ஐவ ருளங்காடு வத்தனையும் சுத்திசெய்து
சைவருளங் காட்டீர் தயவே பராபரமே

7 காடு மலைகள்சுற்றிக் காயாசம் பூண்டாலும்
ஆடு மனமிறக்க ஆள்வாய் பராபரமே.

8 தூல ஜடலமதைச் சுத்திசெய்து வத்துவிதச்
சீலமுடன் ஞானமொழி செப்பாய் பராபரமே.

9 போக்கு வரவற்ற பூரணமாம் ஞானபதம்
வாக்கு மனதிற்கெட்டா வானே பராபரமே.

10 ஐவ ருளங்காடு வத்தனையும் மெய்யுணரச்
சைவநெறி காட்டுந் தனியே பராபரமே.

11 காட்டிற் புலிகரடி கண்டபடி சூவவிட்டு
வீட்டைக் குழப்புவது மேனோ? பராபரமே.

12 அணுவா மணுவுக்குள் ளாலமெலாந் தானதுவா
மணுவான வாய்மைதனை வைப்பாய் பராபரமே.

13 காயாசம் பூண்டு கடைத்தேறி நிற்பவர்க்கு
மாயா மயக்கமெலாம் மாறும் பராபரமே.

14 முத்தர் பணிசெய்து மோன முறையிருக்க
சித்தந் தெளியவருள் செய்வாய் பராபரமே.

15 உன்தெய்வ மென்றெய்வ மொன்றிரண் டென்றுரைப்போர்
தன்னை யுணராத சண்டி பராபரமே.

16 எல்லையின்றிக் கண்டு யிதயந் தெளியார்க்குத்
தொல்லைவினை போமோநீ சொல்லாய் பராபரமே.

17 எல்லையறிந் தெல்லையற்று ஏகாந்த மாய்வணங்க
அல்லும் பகலுமற்ற வையே பராபரமே.

18 சூந்திரத்தைக் கண்டு சுகம்பெற் றிருப்பதற்கு
நேத்திரத்தின் மையம் நேராம் பராபரமே.

19 பட்டைநண்டு போலப் படபடத்த நெஞ்சினர்க்கு
கிட்டை நிருவிகற்ப நேரோ பராபரமே.

20 விட்டுவிட் டுத்தொழுது வீண்கதைகள் பாடினதை
தட்டிக் கவிழ்த்துவிட்டாய் தாயே பராபரமே

21 கூட்டி லிருக்குங்கிளி கோதிலா மாதவத்தால்
காட்டிற் பிரியாவண்ணம் காப்பாய் பராபரமே

22 அரிதான பஞ்சணையி லாளுகின்ற வெம்பிரானின்
உரிதான காக்ஷி வுகப்பே பராபரமே

23 பாவிநெஞ் சந்திருந்தி பாலவனஞ் சுட்டெரித்து
தாவி யருள்புரிவாய் தஞ்சம் பராபரமே

24 நெஞ்சின் பதர்நீக்கி நின்னருளைப் போற்றிசெய
அஞ்சா வரந்தருவா யாண்டே பராபரமே

25 கலிமா வுணர்ந்து கலிதீர்ந்து நிற்பதற்குச்
சலியா வரந்தருவாய்த் தானே பராபரமே

26 ஜெபமாலை கைபிடித்துச் சீர்கேடாய் வாய்முணுக்கும்
பவமாலை வேண்டேனே பாவம் பராபரமே

27 வாசியினி லேறி வலமிடந்தி ருப்பாமல்
மாசிலா ஜோதி வழங்காய் பராபரமே

28 கடவுளை நாடி கடைத்தேறி நின்றிடவும்
திடமாக மெய்ஞ்ஞானம் செப்பாய் பராபரமே

29 தீர்மானங் கண்டு சிவபோதம் சார்ந்தவர்க்குக்
கார்மானந் தானுகக் காண்பாய் பராபரமே

30 மந்திரங்களைஜெபித்து மானிடரைப் பேயாட்டும்
மந்தபுத்தி யோரை மதியேன் பராபரமே

31 கோடான கோடிமறை கூறிய பூரணத்தைத்
தேடி அபயமிட்டேன் தேவே பராபரமே

32 முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலுக் கப்பாலா யானாய் பராபரமே

33 அறியாச் சிறியேற்கு அத்துவிதத் தையுணர்த்தும்
பிரியாப்பே ரின்பவாழ்வு பேறும் பராபரமே

34 சாஸ்திரங்க ளோலமெலாம் சந்தைக்கடைகூச்சலென்
சூஸ்திரத்தைப் பார்க்கத் துணிந்தேன் பராபரமே[று

35 தற்போத மற்றிடவுந் தாக்கற்று நின்றிடவும்
சிற்போத ஞானமொழி செப்பாய் பராபரமே

36 எத்தவங்கள் செய்தாலு மெத்துறவு பூண்டாலும்
சித்த மிறந்தாலே சீராம் பராபரமே

37 கடலைப்போல் கற்றதனால் கண்டபல னொன்றுமிலை
திடஞான வைராக்யம் தேர்ந்தேன் பராபரமே

38 பஞ்சமா பாதகங்கள் பஞ்சாய்ப் பறந்திடவே
தஞ்சமென்றே யுன்பாதம் சார்ந்தேன் பராபரமே

39 வேதாந்த வேதமெலாம் விட்டேறும் மெய்ஞ்ஞான
போதநெறி சொன்னாலே போதும் பராபரமே

40 ஐம்புலச் சேட்டைகளா மத்தனையும் பாழாக்கி
மொய்ம்புளச் சுத்தி மொழிவாய் பராபரமே

41 பேரின்ப சாகரத்திற் பேதை துதைந்தாடும்
பேர்பெருகச் செய்துவிட்டால் பேறும் பராபரமே

42 அத்து விதமறிந்து ஆனதவ் வீதுணர்ந்து
சுத்தசை தன்யமுறின் தோன்றும் பராபரமே

43 சாகாமல்செத்திருக்கும் சற்குருவைச்சார்ந்திருந்தால்
போகாக் கவலையெலாம் போமே பராபரமே

44 கள்ள மனத்தைக் கடக்க நினைதருளாம்
வெள்ளைத் திருக்கருணை வேண்டும் பராபரமே

45 படிப்பாம் பெருந்திரையின் பாசத்தை நீக்கிமன
துடிப்பு முதிப்புமறச் சொல்வாய் பராபரமே

46 தத்துவஞா னம்பெற்று சைதன்ய தானமுற்று
சித்தந் தெளிந்திருக்கச் செப்பாய் பராபரமே

47 தடைக்க மனத்துடுக்குத் தொல்லை யெதிர்த்துநிதம்
கடக்க வழிஎனக்கு காட்டாய் பராபரமே

48 ஐனை ஐன்கலிமா வந்தரங்க சேவைதர
வயனை வாய்மை வழங்காய் பராபரமே

49 ஜமாலுஞ்ஜ லாலுங்கூடி சையோக மானசிந்தை
கமாலான பொக்கிஷமாங் காக்ஷி பராபரமே

50 காமக் குரோதக் கடிநாய்கள் போலலைந்தால்
நேமநிட்டை யாவும் நிலையோ பராபரமே

51 கங்குல் பகலற்ற கருணையா னந்தவெள்ளப்
பங்கு கொடுத்தாளும் பதியே பராபரமே

52 அறிவை யறிந்துமதற் கப்பாலாய் நிற்பவர்க்கு
குறியேதும் சொல்வதுண்டோ கூறாய் பராபரமே

53 தன்னை மறந்து ஜமாலைச்சு கூதுசெய்ய
வண்ண மலர்ப்பதத்தை வைப்பாய் பராபரமே

54 எட்டிரண்டு மேயுணர ஏகாந்த மாமதனால்
அட்டாங்க யோக மருள்வாய் பராபரமே

55 நாத மணிவிளக்கே! நாதாந்த முச்சுடரே!
காதலித்தேன் பூரணத்தைக் கண்ணே! பராபரமே

56 ஆறுதா ரங்கடந்தே யக்கரையி லேயமர்ந்து
பூராயங் காணப் புகலாய் பராபரமே

57 ஆழிக் கடலி லலையுந் துரும்பதுபோல்
பாழிலலை யாவண்ணம் பாராய் பராபரமே

58 வாக்கும் மனமும் மறைந்தவான் சிற்ஜோதி
நோக்கும் வகையை நுகராய் பராபரமே

59 நித்திரையை நீக்கி நினைவற்று நின்றிடத்தான்
உற்றநிர்வி கற்ப முணர்த்தாய் பராபரமே

60 வெட்டவெளிப் பொட்டலிலே வேதாந்தப் பொங்க
சட்ட வரம்பதுபோல் தாராய் பராபரமே [லிட்டு

61 பொய்யான மெய்யுடலிற் பொன்றுப் பொருளுணர்ந்
செய்யா வினைகளெல்லாம் தீரும் பராபரமே [தால்

62 இருவினைக் காவடிக ளேற்றுச் சுமந்தலையும்
பிரிவினையாம் பேயருடன் பேசேன் பராபரமே

63 பூரணமாம் நின்வடிவைப் பூசைசெய்து போற்றிநிற்க
தாராள மாகவரந் தாராய் பராபரமே

64 எங்கெங்குந் தானுய்வே றேதுமிலை யானதுவால்
பொங்குந் திருவருளாய்ப் பூத்தாய் பராபரமே

65 எங்கு மருள்நிறைந்த யேகாந்த வெள்ளமதில்
அங்கந் தெளிந்திருக்க வாசை பராபரமே

66 செய்யுஞ் சடங்கறியேன் திக்கற்ற சிந்தையனேன்
அய்யா வுனக்கடிமை யானேன் பராபரமே

67 பாழான காயமதைப் பக்குவமாய்க் கண்டுணர
ஆளாக்கி யாண்டருள்செய் யையா பராபரமே

68 சைதன்ய சாகரத்திற் ருகந் தெளிந்திருக்கக்
கைவல்ய மாகவெனைக் காப்பாய் பராபரமே

69 காய மிருளரையைக் கற்பகமாய்ப் பூர்த்திசெய்து
மாய மயக்கறுத்தால் வாழ்வேன் பராபரமே

70 சாகா வரங்கடந்து சையோகப் பித்தைவென்றால்
போகாப் புலனைவெலும் புண்யம் பராபரமே

71 இல்லாது மற்றேது மில்லா திருப்பவர்க்கு
சொல்லா வுணர்வெளியே தோன்றும் பராபரமே

72 எப்பொருளுந் தானு யிலங்குகின்ற மெய்ப்பொருளே
தப்பாமல் சாரவுநின் றுளே பராபரமே

73 ஆட்டங்க ளெல்லா மடிமாண்டு போயுமொரு
தேட்டமு மற்றிருக்கச் செய்வாய் பராபரமே

74 மவுன நிலையறிந்தும் மாட்டாங்கிப் பேயதுபோல்
கவலை யுறலாமோ கண்ணே பராபரமே

75 வாயாற் றனந்தேடி வாசகத்தாற் கோட்டைகட்டும்
பேயருக்கு ஞானம் பெரிதோ பராபரமே

76 வாசாஞா னம்படித்து வாய்ப்பந்தல் போட்டலைவோர்
காசாசைப் பித்தரெனக் காண்பாய் பராபரமே

77 பேரின்ப ஞானமதைப் பேணி நடப்போர்க்குப்
பாரிலுள் ளோர்நிகரோ பாராய் பராபரமே

78 அற்ப ஜலத்துளியை யாளாக்குந் தற்பரனே
உற்றதுணை நீயா யுவப்பேன் பராபரமே

79 நெஞ்சகத்தி னூடே நினைப்பு மறப்புமறத்
தஞ்சமென் றுன்பாதஞ் சார்ந்தேன் பராபரமே

80 எல்லாமா யல்லவுமா யேகாந்த வாகனுமாய்ப்
பல்லுயிருந் தானாய்ப் பகர்ந்தாய் பராபரமே

81 ஆதியும னாதியுமா யம்பலத்திற் பள்ளிகொண்ட
நீதியாம் செங்கோல் நிகழ்த்தாய் பராபரமே

82 நீதி நெறிதவறா நின்னரசு சான்றோர்க்குச்
சாதியே தங்களுந்தான் சால்போ பராபரமே

83 முத்துநவ ரத்தினமே மூல முதற்கொழுந்தே
சத்துசித் தானந்தந் தந்தாள் பராபரமே

84 பச்சை மரகதமே பாதசர ரத்தினமே
அச்சந் தொலைய வபயம் பராபரமே

85 நற்பவள முத்தேயென் நாதாந்த முச்சுடரே
கற்பகக்க ளஞ்சியமே கண்ணே பராபரமே

86 இறப்பும் பிறப்புமற் றேகாந்த மாயிருக்க
துறப்பைத் திறக்கும்வகை சொல்லாய் பராபரமே

87 காட்டுக் கிளிகளைப்போல் கண்டகலை கற்றாலும்
ஏட்டுச்சுரக் காயி னியல்பே பராபரமே

88 ஏட்டுச் சுவடியாலு மெட்டாத வான்கருணை
காட்டி யருளவேண்டும் கண்ணே பராபரமே

89 எத்தனைதான் கற்றாலு மேதேது செய்தாலும்
சித்த மிறக்கவேநீ செய்வாய் பராபரமே

90 நினைப்பு மறப்புமற்று நின்னருளைப் போற்றிசெய
தினைப்பொழுது மாறாவருள் தேவே பராபரமே

91 மாய மயக்கறுத்து மாதவத்தி லேயுறைந்தால்
காயகற்ப மாகிக் கலங்கேன் பராபரமே

92 சாக்கிரமுஞ் சொப்பனமுஞ் சாருஞ் சுழுத்தியதைப்
போக்கித் துரியம் புகலாய் பராபரமே

93 கோலங் குறியற்று குருவைத் தொழுதிடவும்
காலன் கடந்திடவுன் காப்பே பராபரமே

94 பாலங் கடந்து பரனருளைச் சார்ந்துனது
பாலனு யாகமுகம் பாராய் பராபரமே

95 எட்டாத முத்திநெறி யெட்டாம லெட்டுதற்கு
இட்டகுறி யற்ற வியல்பே பராபரமே

96 ஆக்கைகளா மூன்று மறிந்துதுறந் தோருள்ளம்
போக்குவா வற்ற பொருளே பராபரமே

97 சுட்டறவு மற்ற சுகாதீத ஞானவெளி
மற்றற்ற மாதவத்தார் மாண்பே பராபரமே

98 முற்றுந் துறந்து மோன பதம்பெறவே
சிற்றடியே னுக்குவரம் சேவை பராபரமே

99 அண்டபிண்ட மெண்டிசையு மார்ந்து தெளிந் [திருக்கத்
தொண்டனுக்கு நின்கருணை சொல்வாய் பராபரமே

100 கங்கு கரையற்ற கருணைக் கடுவெளியில்
முங்கிக் குளிக்கவருள் முத்தே பராபரமே

101 எல்லாமா யல்லவுமா யேகாந்த மாயிருக்க
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே

102 அஞ்சு மொடுங்கியுடன் அஞ்சாத தீரமிகத்
தஞ்சம் புகுதவது தந்தாள் பராபரமே

103 மோன மவுனமணி முக்கனியாம் பொக்கிஷத்தை
யானு முணர அருள்வாய் பராபரமே

104 உன்னையன்றி வேறிங் கொதுங்குந் தலங்களுண்டோ
என்னையா ராய்வதுந்தா னேனோ பராபரமே

105 வல்லானே யுன்னையன்றி வையகங்க ளேதுசொலாய்
எல்லாமு முன்ற னியல்பே பராபரமே

106 வையகத்தோர் வாழி வரம்பெற் றுயர்ந்துநின்ற
செய்யகத்தோர் வாழி திருவே பராபரமே

107 தேசிகனார் வாழி சிறக்குமெஞ் ஞானமுள
ஆசிலா தார்வாழி யாதி பராபரமே

மெய்ஞ்ஞான மயில் சூக்ஷம்

வெண்பா.

அல்லலற்று தொல்லையற்று அல்லிரா வற்றசுகச்
சொல்லற்று செய்தொழிலின் சோகமற—இல்லறத்தே
கம்பமற்ற சாகரத்து காசின் மயில்சூக்ஷம்
அன்புற்று வோத வருள்.

---

1 பிஸ்மில்லா ஹிர்றஹ்மான்—மயிலே
னிர்றஹீ மென்றுரைத்து
துஸ்மனைத் தூருக்கி—மயிலே
துடங்குவாம் மயில்சூக்ஷம்

2 தாரணி மீதினிலே—மயிலே
தாய்பாஷை செந்தமிழால்
பாரோர்க் குதவியென்றே—மயிலே
பாடும் மயில்சூக்ஷும்

3 ஹதீவா இலங்குதடி—மயிலே
ஹதீதாவின் ரகசியமே
தேவ வமிர்தமடி—மயிலே
தெவிட்டா மாங்கனியே

4 ஆலம் விரிந்ததெல்லாம்—மயிலே
ஆதங்கி யால்தானே
தூலங்கடந் தாக்கால்—மயிலே
சூக்ஷமங் காணலாமே

5 ஆமந்து பில்லாஹி—மயிலே
ஐயமறத் தெளிந்து
காமந்தனை நீத்தால்—மயிலே
கருணைக் கடல்சூழும்

6 இஸ்லாத் தின்துறவு—மயிலே
இச்சை யொழிந்தவிடம்
பிசகியே வாய்மதத்தால்—மயிலே
பிதற்றுவார் மானிடரே

7 பேராசை புல்லருக்கு—மயிலே
பேரின்பங் கிட்டாதடி
பாராசை பற்றகன்றால்—மயிலே
பராபரந் தோணுமடி

8 சொல்லவொண்ணு சூக்ஷும்—மயிலே
சொல்லவும் வேணுமடி
சொல்லும் சகிக்கினையால்—மயிலே
சுத்தந் தெளிவாயே

9 அல்லும் பகலுமில்லை—மயிலே
அந்தக் கருஊரு
இல்லல் லா(ஹ்)வென்றே—மயிலே
ஏகமா யாளுதடி

10 அவ்வல் கலிமாவை—மயிலே
அறிய வுபாயமடி
இவ்வுலக வாழ்வை—மயிலே
இழந்தா லிணங்குமடி

11 கலிமாவின் நற்சூக்ஷும்—மயிலே
ஹா-ஹூ-ஹி-யாச்சு
கலங்கா மனமிருந்தால்—மயிலே
காக்ஷிகள் மெத்தவுண்டே

12 அலிபுலாம் மீமுமொன்ருய்—மயிலே
அலையா மனதிறுத்தி
சலியா தவம்புரிய—மயிலே
சற்குரு தோற்றமடி

13 முக்கோண வீதியிலே—மயிலே
முத்து பவளம்பச்சை
சுக்காணை நேர்பாரடி—மயிலே
சூக்ஷ சுழிமுனையில்

14 முத்து மிலங்குமடி—மயிலே
முச்சுடர் வட்டத்திலே
அத்து விதப்பச்சை—மயிலே
அமரும் பாராபரத்தில்

15 பாவங்க ளோய்ந்திடுமே—மயிலே
பவளக் கொடிபூத்தால்
மூவகைப் பூதொடுத்தால்—மயிலே
முத்திக்கு வித்தடியே

16 அஞ்ஞானம் விட்டொழிந்தால்—மயிலே
அஞ்சாறு கிட்டுமடி
விஞ்ஞாபனர் மொழிந்த—மயிலே
வேதாந்த ஞானமடி

17 இஸ்லாமதன் சரியை—மயிலே
இணங்கு கிரிகை யோகம்
விஸ்வாச வுள்ளத்துளே—மயிலே
விரைந்துகொள் ஞானமடி

18 சரிஅத் நபிகள்சொன்ன—மயிலே
சார்ந்த சுருதிமொழி
தரீக்கத் நபிகள்செயல்—மயிலே
சகலரும் செயக்கடனே

19 ஹக்கீகத் திறகூல்ஹால்—மயிலே
ஹல்கை பஞெ்செய்வதே
ஹக்கன் குதாத்தையும்—மயிலே
கசட றறியாரே

20 ஹாத்திம் நபியிரசூல்—மயிலே
ஹாலின் சுருக்கத்தைக்கேள்
பாத்தியமாய் நமக்கு—மயிலே
பரனருள் புரிவாரே

21 மஹ்மூதர் சிர்ராகும்—மயிலே
மஃரி பதத்தின்சூக்ஷம்
அஹ்மதா மீமில்லார்—மயிலே
அதீதமாய்ப் பார்ப்பாயே

22 அறிந்தோரு மில்லையடி—மயிலே
அறியாரு மில்லையடி
விரிவாயுரைத் தாக்கால்—மயிலே
விபகார மாகு'மடி.

23 பலநூலைப் பார்க்கலாமோ—மயிலே
பாழி லலையலாமோ
உளநூலை யுற்றுணர்ந்தால்—மயிலே
யுந்தனின் கோலமடி

24 இருமேடு வுப்பளமாம்—மயிலே
இல்லத்து ளேகரைத்து
ஈரற்ற ஜகஜோதி—மயிலே
ஏகமாய்ப் பாரடியே

25 அல்ஹம்து லில்லாஹி—மயிலே
அகமியமே தெளிந்தால்
இல்ஹாம் லதுன்னி இல்மு—மயிலே
இறைவ னருள்வானே

26 தன்னை யறிவதற்கு—மயிலே
தந்திர மொன்றுசொல்வேன்
உன்னும் மனங்குவிந்தால்—மயிலே
வுலகெலாம் போற்றுமடி

27 பந்த மனங்குவிய—மயிலே
பார்க்க மிகவரிது
சிந்தை தெளியவென்றால்—மயிலே
திவ்யவழி செல்லடி

28 நித்தமு மைந்துவேளை—மயிலே
நேம முடன்தொழுதால்
சத்திய சன்மார்க்கம்—மயிலே
தாவி யமுதூட்டும்

29 கலிமா தொழுகைநோம்பு—மயிலே
கலப்பற்ற சக்காத்து
தலமான ஹஜ்ஜாகும்—மயிலே
தகிபெறு மாசாரம்

30 வேதங்கள் வந்ததெல்லாம்—மயிலே
வேதாந்த மெய்யுணர
சாதங்கள் வந்ததுவே—மயிலே
சரீர முணர்பெறவே

31 பூத ஜடமெடுத்தோம்—மயிலே
பொன்னம் பலம்பாட
பேதக மில்லாமலே—மயிலே
பேரின்பம் பாரடியே

32 ஆதியு மந்தமில்லை—மயிலே
அவ்வல் பஜரொகுத்தில்
ஆத்மசொ ரூபங்காண—மயிலே
அசராம் சமாதினிலே

33 அத்து விதப்பொருளே—மயிலே
ஆனந்த சோபிதமே
நித்திய வாழ்வடிவே—மயிலே
நீ, நானும் வேறில்லையே

34 மங்கள வீட்டுக்குள்ளே—மயிலே
வாழ்ந்திடு ரஞ்சிதமே
மங்காத ஜோதியடி—மயிலே
மஹ்ரூதர் காக்ஷியடி

35 சங்கீத சல்லாபமே—மயிலே
சாரீர நாட்டுக்குள்ளே
இங்கிர்த தீதஞக்ஷம்—மயிலே
இனிமையாய்ப் பாடலாமே

36 தந்திர மானதடி—மயிலே
சாக்கிர லோகமடி
தொந்த மகன்றிடவே—மயிலே
சொர்ப்பன காக்ஷியடி

37 தூக்க மிரட்டுதடி—மயிலே
சுழுத்தி மயக்கத்தாலே
ஏக்கந் தொடுக்குதடி—மயிலே
என்னை யறிவதற்கே

38 சோம னுதயமதில்—மயிலே
துரிய மிலங்குதடி
சீமா னிருப்பிடந்தான்—மயிலே
சீரிய சிம்மாசனம்

39 ஆமந்து பில்லாஹியாம்—மயிலே
அஞ்சாறு பூத்ததுவே
அமரரும் காணரிதே—மயிலே
அதீதசெங் கோலரசு

40 ஞானத் திறவுகோலே—மயிலே
நம்புவோர்க் கல்லாது
ஈனர்க் குரைத்தாக்கால்—மயிலே
இழிவுகள் மெத்தவடி

41 ஞானங்க ளேதுக்கடி—மயிலே
நாரியர் காமியர்க்கு
வீணுக்கு ஜெபமாலே—மயிலே
விரட்டுவார் முணுமுணுத்து

42 பஞ்சுகள் போல்பரக்க—மயிலே
பாழில் மனத்தைவிட்ட
பஞ்சமா பாதகர்க்கு—மயிலே
பரனருள் கிட்டாதடி

43 பந்தங்க ளேதுக்கடி—மயிலே
பாசங்க ளேதுக்கடி
சிந்தை தெளிந்தாக்கால்—மயிலே
சின்மயஞ் சூழுமடி

44 கோடான கோடிமறை—மயிலே
கூர்க்க வுணர்ந்தாலும்
ஆடி யலையுமனம்—மயிலே
அம்பர மேறுதடி

45 சஞ்சல மானதடி—மயிலே
தாரணி யுல்லாசம்
நெஞ்சம் தனைத்தெளிந்தால்—மயிலே
நீடூழி வாழலாமே

46 வஞ்சக மேதுக்கடி—மயிலே
வையக மீதினிலே
கொஞ்சப் புத்தியாலே—மயிலே
குவலயஞ் சுற்றுதடி

47 கஞ்சத்தா ளைக்குருவே—மயிலே
காக்ஷி யருள்புரிந்தார்
தஞ்சமென் றேயமர்ந்தால்—மயிலே
சற்குரு சந்தானமே

48 வயது அஞ்சதிலே—மயிலே
வல்லல் முஹிய்யதீனை
பயனுங் கெஞ்சிகின்றேன்—மயிலே
பரனருள் பெற்றிடவே

49 காரண ரானோரடி—மயிலே
கண்மணி முஹிய்யிதீனும்
பூரணக் காதிரடி—மயிலே
புல்லர்க் குரைக்காதே

50 பேசாத மோனமடி—மயிலே
பேரின்ப பூங்காவனம்
ஈசனி ருப்பிடமே—மயிலே
இராப்பக லற்றவிடம்

51 ஹாலென்று சொல்வாரன்றேல்—மயிலே
கருதி யுணரார்கள்
கோலன் வழிக்கிசைந்து—மயிலே
குடிகெட்டு மாள்வாரடி

52 துள்ளு மனமொடுங்க—மயிலே
சொல்லுஞ் செயலுமில்லை
தெள்ளி லுளிபரவும்—மயிலே
சீர்துரி யாதீதமே

53 பரமவுல் லாசரைப்போல்—மயிலே
பாழி லலைவாரடி
கிரம முணராரடி—மயிலே
கிருமி மலக்கூட்டை

54 புஸ்தகக் கட்டுகளை—மயிலே
பொதிபோல் சுமந்தலைவார்
விஸ்தீர ஆகிரத்தை—மயிலே
வேண்டியும் பாராரடி

55 கொல்ல னுலையூது—மயிலே
கோலனும் தீய்ந்திடுவான்
சொல்லுந் திருக்கருணை—மயிலே
தோன்றுதருள் சுரக்கும்

56 அச்சமு வேண்டுமடி—மயிலே
ஆரம்ப வாசாரத்தில்
அச்சமு மற்றிருப்பார்—மயிலே
அதீதமெய்ஞ் ஞானிகளே

57 இதற்கு மேல்விரிக்க—மயிலே
இங்கு விடந்தராதே
விதர்ப்ப மிட்டொழிந்தால்—மயிலே
வேதாந்த மமுதூட்டும்

58 கையைக் கழுவினதால்—மயிலே
கரைசேர லாகாதடி
வையக மீதினிலே—மயிலே
வஞ்சகம் நீக்கவேணும்

59 மெய்யகம் பார்த்தாக்கால்—மயிலே
மேன்மை பொருந்தலாமே
துய்யோ னிருப்பிடமே—மயிலே
சுத்த சுகாதீதமே

60 ஒன்றைவிட் டொன்றுபட்டால்—மயிலே
ஒதுங்குந் தளமாகும்
நின்ற நிராமயமாய்—மயிலே
நிர்மல சோபிதமே

61 ஓவியம் போலதுவே—மயிலே
உறைந்த மனத்தினர்கள்
ஆவிக் குருதுணையாம்—மயிலே
ஆன்றோர்கள் நூலோதினர்

62 நினைப்பு மொழியவேணும்—மயிலே
நெஞ்சந் துறக்கவேணும்
குணமும் பெருகவேணும்—மயிலே
குன்று சாகரமாய்

63 இணைகளு மில்லாமல்—மயிலே
இல்லந் துறக்கவேணும்
துணைகளு மில்லாமல்—மயிலே
தோத்திரஞ் செய்யவேணும்

64 வீணாசை ஏதுக்கடி—மயிலே
மேதினி மீதினிலே
வாணாளைப் போக்காமல்—மயிலே
வந்த வழியறிவாய்

65 ஆணும்பெண் ணுங்கூடி—மயிலே
அமைந்த சிவாயமடி
தேனும்பா லும்போலே—மயிலே
தேர்ந்து கலக்கவேணும்

66 கொஞ்சப் பலனுமுள்ள—மயிலே
கோதிலாக் காயக்கோட்டை
பஞ்ச கிருத்தியங்கள்—மயிலே
பங்க மொழியவேணும்

67 பஞ்சாயக் காரர்களும்—மயிலே
பஞ்சாப் பறக்கவேணும்
கொஞ்சி யருள்புரிவார்—மயிலே
குணங்குடி யாண்டவரே

68 சிந்தை யறந்தெளிந்த—மயிலே
சிவராச யோகிகளே
எந்தன் குருதெய்வமாம்—மயிலே
இனியொன்றைப் பற்றேனே

69 சொந்தச் சிவனிருக்க—மயிலே
சுற்றுவார் வினைவழியில்
சந்தேகத் தைநீக்கி—மயிலே
தன்னிலே காணவேணும்

70 யானை குதிரையேறி—மயிலே
ராஜாங்கம் ஆண்டாலும்
ஈன மூடனுக்குத்தான்—மயிலே
இப்புவி யுறவில்லையே

71 அனைத்து மிருமொன்றாய்—மயிலே
யறிந்து தெளிவாயே
மனத்துளே பேதாபேதம்—மயிலே
வைக்கவு மாகாதே

72 சினம றுத்தாலும்—மயிலே
சித்திகள் பெற்றாலும்
மனமிறக்கா விட்டால்—மயிலே
மவுனமும் வாய்க்காதே

73 இகபரத் திற்குமே—மயிலே
இரக்ஷண்ய ராகவந்த
முகம்ம திரசூலே—மயிலே
முத்திவழி சுரப்பார்

74 ஆசாபாசங்க ளற்றால்—மயிலே
அல்லலுந் தொல்லையில்லை
மாசற்ற பூங்காவிலே—மயிலே
மாமிக வைகலாமே

75 இன்பதுன்ப மகன்றால்—மயிலே
இல்லற நல்லறமே
அன்பர் பணிவாய்த்தால்—மயிலே
அதுவொன்றும் போதுமடி

76 ஊத்தைச் சடலமடி—மயிலே
ஒன்றுக் குதவாதடி
பார்த்து தெளிந்தாக்கால்—மயிலே
பராபரங் கிட்டுமடி

77 எண்ணிய வெண்ணமெலாம்—மயிலே
ஏட்டுச்சுரைக்கா யல்லோ
தன்னையுந் தானறிந்தால்—மயிலே
சச்சிதா னந்தமடி

78 சஞ்சல மாகாதே—மயிலே
சதாசிவந் தானிருக்க
அஞ்சவு மாகாதே—மயிலே
ஆனந்த மானந்தமே

79 சரிகையின் தோற்றமெல்லாம்—மயிலே
சாலோக மானபதம்
கிரிகையின் செயல்களெல்லாம்—மயிலே
கேடில் சாமீபபதம்

80 யோகங்க ளென்பதெல்லாம்—மயிலே
யுண்மைச் சாரூபபதம்
ஏகாந்த ஞானமடி—மயிலே
இனியசா யுட்சபதம்

81 சிந்தை கலங்காதடி—மயிலே
சிவராஜ யோகிகட்கு
அந்திபகலு மற்று—மயிலே
அதீதமு மாவாரடி

82 பஞ்சமா பாதகங்கள்—மயிலே
பாரினில் மெத்தவல்லோ
நெஞ்சையும் விட்டுவிட்டால்—மயிலே
நிட்டையும் வேண்டுமடி

83 தன்னையுந் தானறிந்தால்—மயிலே
தனக்கொரு கேடில்லையே
கண்ணாடிக் குள்ளொளிபோல்—மயிலே
காணும் சொரூபமடி

84 குருவாம் முகம்மதரே—மயிலே
குறைகளைத் தீர்ப்பாரே
பெறுவோம் பேரின்பமுத்தி—மயிலே
பேதமை யேதுக்கடி

85 மார்க்கம் நமக்கிருக்க—மயிலே
மனதுகலங்க லாமோ
ஆக்கை விவகாரம்—மயிலே
அல்லலை நீக்கவேணும்

86 பார்க்கு மிடந்தோறும்—மயிலே
பரிபூரணம் பாரே
பூக்கும் விழிநோக்கி—மயிலே
போற்றி சுகூதுசெய்வாய்

87 அறிவை யறிவோர்க்கு—மயிலே
அகங்கார மேதுக்கடி
சரியாய் நிலையில்நின்றால்—மயிலே
சச்சிதா நந்தமடி

88 கருவை யறியவென்றால்—மயிலே
காக்ஷிகள் மெத்தவுண்டு
பெருமை யறநீக்கி—மயிலே
பிறிதொன்றை நாடாதே

89 இந்த வகையறிய—மயிலே
ஏற்ற பெரியோரைச்
சந்தித்தடி பணிந்தால்—மயிலே
சாற்றுவர் சான்றோர்வழி

90 சந்தேக மேதுக்கடி—மயிலே
சன்மார்க்க தீரருக்கே
சிந்தை தெளிந்தாக்கால்—மயிலே
திவ்ய வருள்பூக்கும்

91 அஞ்செழுத் தானதடி—மயிலே
அல்ஹம்ந் தெனும்சூக்ஷம்
பிஞ்செழுத் தைப்பழக—மயிலே
கொஞ்சமு மஞ்சாதே

92 உள்ளெழுத் தைக்கண்டு—மயிலே
உணர்ந்தவர்க் குண்டோயீடு
சொல்லப் பிறிதுமுண்டோ—மயிலே
சுத்தசுகா தீதமே

93 கள்ளக் கருத்துகளை—மயிலே
கட்டோட நீக்கவேணும்
துள்ளும் மனம்நசித்தால்—மயிலே
சும்மா இருந்துவிடு

94 நினைப்பு மறப்புமற்று—மயிலே
நிய்யத்து வைக்கவேணும்
மனது சரியாமல்—மயிலே
மாதவம் செய்யவேணும்

95 நானு வுரைத்ததல்ல—மயிலே
நாயனரு ளாலே
பேணி யுரைத்தேனே—மயிலே
பெரியாரைத் தாள்பணிந்து

96 வேதாந்த நூல்களெல்லாம்—மயிலே
விதித்த படியுணர்ந்து
பேதக மில்லாமலே—மயிலே
பேசினே னின்னூலை

97 நான்கு மறைகளையும்—மயிலே
நன்று யுணரவேணும்
தீனை பேர்களுக்கும்—மயிலே
சிறப்பா யுரைக்கவேணும்

98 பிழைக ளிருந்தாலும்—மயிலே
பெரியோர் பொறுப்பாரே
தெளிவாக சீர்திருத்தி—மயிலே
சேயனைக் காப்பாரே

99 காணுந் திரிசியமு—மயிலே
கடக்கவே வேணுமடி
தோணுந் திருக்கதுவே—மயிலே
தோத்திரம் செய்துகொள்வாய்

100 காயமுஞ் சுத்தியடி—மயிலே
கருவை யறிந்தாக்கால்
மாயுமுன் மாய்ந்தாக்கால்—மயிலே
மாசற்ற முத்தியடி

101 ஏகாந்த நிட்சையடி—மயிலே
எண்ணாத பேரொளியே
வாகா முணர்வெளியே—மயிலே
வல்லப மாச்சுதடி

102 வெட்ட வெளிபாரு—மயிலே
வேதாந்தத் தில்தேறு
சட்டக் குழப்பமெலாம்—மயிலே
சாரா தோடிடுமே

103 அணுவு மில்லையடி—மயிலே
ஆராயும் வேளையிலே
உணர்வாம் வெளிதானே—மயிலே
உற்ற தெரிசனமே

104 பெருந்தகை சாஸ்திரத்தை—மயிலே
பின்பற்றி யேநடந்து
தெரிந்தோர்கள் சொன்னதையே—மயிலே
சிறியேனும் பாடினேனே

105 சகலகலை ஞானமும்—மயிலே
சகலர்க்கு மாதரவாய்
திகழ வதன்படியே—மயிலே
செப்பினே னின்னூலை

106 பல்லாயிர நூலும்—மயிலே
படித்ததற் கொப்பாகும்
எல்லா முணர்த்திவைக்கும்—மயிலே
இந்தமயில் சூக்ஷம்

107 முத்தர்களும் வாழி—மயிலே
முதியோர்களும் வாழி
சித்தர்களும் வாழி—மயிலே
ஜீவரெலாம் வாழி.

எந்நாட்கண்ணி

1 அத்து விதமுணர்ந் தையன் றிருவடியைச்
சித்தந் தெளிந்துணர்ந்து சேவிப்ப தெந்நாளோ

2 எல்லாமா யல்லவுமா யின்புற் றிருக்கவொரு
சொல்லருளாய் வந்த சுகமணைவ தெந்நாளோ

3 சுத்தசித்த மாகித் துரியாதீ தவ்வெளியில்
நித்தியா நந்தசுகம் நேசிப்ப தெந்நாளோ

4 கண்டெனவெ லாமறைந்து காணு முணர்வெளியை
உன்னு மனமிறந் தோர்ந்திருப்ப தெந்நாளோ

5 பார்க்கு மிடந்தோறும் பரிபூ ரணமாக
நோக்குந் திருவடியை நோக்குநா ளெந்நாளோ

6 காசாசை கொண்டு கலங்கித் திரியாமல்
மாசறுந் தேசிகரை வாழ்த்துவது மெந்நாளோ

7 சலன மொழிந்துமிகச் சஞ்சலமும் பாழாகி
புலனொடுங்கி நின்பாதம் பூசிப்ப தெந்நாளோ

8 அங்கிங்கெ னாத அறிவா முணர்வெளியை
சங்கையுட னாசரித்துத் தானாவ தெந்நாளோ

9 ஒன்று மணுகாத வுற்ற தெரிசனத்தை
நன்னெறிபோ தித்தபடி நாமணைவ தெந்நாளோ

10 நினைப்பு மறப்புமற்று நின்னருளைப் போற்றிசெய்து
அனைத்துயிருந் தானாக யன்புறுவ தெந்நாளோ

11 மனமற்ற சுத்த மறைவழியி லேதெளிந்து
சினமற்று சித்தந் திரும்புநா ளெந்நாளோ

12 சற்ஜனகு ழாங்களுடன் சல்லாப மாயிருக்கத்
தக்ஷிணா மூர்த்திபதஞ் சாருவது மெந்நாளோ

13 முற்றுந் துறந்தாக்கை மூப்பாழை யுங்கடந்து
வெற்றிக் கொடியேற்றி விள்ளுவது மெந்நாளோ

14 ஆகமத்துக் கெட்டாத வந்தரத்தி னுட்கலந்து
வாகை மலர்சூடி வாழுநா ளெந்நாளோ

15 எல்லா மொழிந்ததுவா யேக வெளியதுவாய்
வல்லானைச் சார்ந்து மகிழ்ந்திருப்ப தெந்நாளோ

16 கண்ணான தாயைக் கலந்துற வாடிடவே
எண்ணாத எண்ணமெலாம் ஈடழிவ தெந்நாளோ

17 துள்ளு மனமொடுங்கிச் சும்மா விருந்துசுயத்
தெள்ளியவான் சோதி தெளியுநா ளெந்நாளோ

18 தற்போத வாஞ்சைச் சரணா கதியடைந்து
கற்பூர வுண்டைபோற் கரைந்திடுவ தெந்நாளோ

19 வேலைப் பிராக்குமுடன் வீணான வார்த்தைகளும்
தூலச் சரீரவிச்சை சுட்டொழிவ தெந்நாளோ

20 சிந்தை சிதையாமற் சித்திரம் போலிருந்து
அந்தணர்கள் பந்தியிலே யன்புறுவ தெந்நாளோ

21 சொல்லரிய ஞானத் துரியாதீ தங்கடந்த
நல்லறிஞர் பின்றொடர்ந்து நாமணைவ தெந்நாளோ

22 சுத்தத் திருவடியிற் சொக்கிச் சுகித்திருக்க
உத்தமர்கள் பெற்றநெறி யோர்ந்திடுவ தெந்நாளோ

23 கள்ளக் கருத்துகளைக் கட்டோடு விட்டொழித்து
வெல்லுந் திருக்கருணை மேவுநா ளெந்நாளோ

24 கற்பனையெ லாங்கடந்து கண்காணத் தீவிரமாய்
சிற்சுக மாயிருந்து தேர்ந்திடுவ தெந்நாளோ

25 மாய மயக்கொழிந்து மனமு மறத்தெளிந்து
தூய வொளியில் சுகித்திருப்ப தெந்நாளோ

26 விண்ணாட ருங்காணா விமலா வுனைத்தொழுது
கண்ணாரக் கண்டு களிப்புறுவ தெந்நாளோ

27 பரமார்த் திகமாகப் பக்திப் பரவசமாய்
சிரமார வுந்தொழுது சேவிப்ப தெந்நாளோ

28 போக்கு வரவற்ற பொருளாம் பெருவெளியை
நீக்க மறக்கண்டு நேசிப்ப தெந்நாளோ

29 உற்ற வுணர்வெளியா யோங்கும் நிறையுணர்வாய்
பெற்ற பெரியோரைப் பின்றொடர்வ தெந்நாளோ

30 மனமார சிந்தித்து மாசறவே நேதிசெய்து
சினமார வேதெளிந்து சேவிப்ப தெந்நாளோ

31 கள்ளக் கருத்துகளைக் கட்டோடு சுட்டெறித்து
உள்ளக் கிடக்கைதனை யோர்ந்திருப்ப தெந்நாளோ

32 வித்தகனார் சொற்பொழிவை மேவிநின்று வேள்வி
எத்திசையுந் தானா யிதமகிழ்வ தெந்நாளோ [செய்து

33 முத்திதரும் வேதாந்த மோன முறையுணர்ந்து
சத்துச்சித் தானந்தம் சாருநா ளெந்நாளோ

34 நாடோடி யாய்த்திரிந்து நற்றவங்கள் செய்தாலும்
தேடுதலு மற்றவிடம் சித்திப்ப தெந்நாளோ

35 வேதவே தாந்தமெலாம் விட்டேறி யேகடந்து
சூதான வெட்டவெளி சொக்கிருப்ப தெந்நாளோ

36 நன்றெனவுந் தீதெனவும் நாடும் நினைப்பொழிந்து
நின்றவர்கள் கண்டநெறி நேர்பெறுவ தெந்நாளோ

37 மத்திபத்தி னூடே மறைக்களத்தின் பொக்கிஷத்தை
பத்திரமா கத்தேர்ந்து பார்ப்பதினி யெந்நாளோ

38 வாக்கு மனமணுகா மௌனமணி வான்பொருளை
தாக்கற்று நின்று சரண்புகுவ தெந்நாளோ

39 சந்தான சாயுட்ச தான்ராஜ யோகியெம்மான்
எந்தை திருவடியை யேற்குநா ளெந்நாளோ

40 அத்துவித மான வகண்டிதா காரசிவ
பத்திப் பரவசத்தில் பண்புறுவ தெந்நாளோ

41 பேதகங்க ளில்லாமல் பேரின்ப ஞானமதில்
சாதனச துட்டயமும் சார்ந்திருப்ப தெந்நாளோ

42 எண்ணாத வெண்ணமெலாம் விட்டே கடந்தேறி
கண்ணூடே காக்ஷிதனைக் காணுநா ளெந்நாளோ

43 கோதிலா மாதவத்தோர் கோரும் குணிவடிவை
ஏதுமிலாச் சிற்றடியே னின்புறுவ தெந்நாளோ

44 மாணபி மானம் மடமை மறந்தடிமை
காணாத காக்ஷிகண்டு கண்குளிர்வ தெந்நாளோ

45 ஐயனே! உன்னையன்றி யாவதுந்தா னென்றுண்டோ
பையனுந் தேறப் பகருநா ளெந்நாளோ

46 கோலங் குறிகடந்த கோவடியைப் போற்றிசெய்து
தாளையா நந்தபதி சார்ந்திருப்ப தெந்நாளோ

47 இம்மை மறுமையினு மின்பதுன்பம் விட்டகன்று
சும்மா விருக்கும் சுகம்பெறுவ தெந்நாளோ

48 சொல்லரிய ஞான சுகவாரி தன்னில்நின்று
துள்ளு மனத்தின் றுடிப்பொழிவ தெந்நாளோ

49 வாக்கு மனங்கடந்த மௌனமணிப் பொக்கிஷத்தை
ஏற்கை நெறிவழுவா திருக்குநா ளெந்நாளோ

50 பஞ்சமாப் பாதகத்தைப் பற்றிவழக் கோரம்சொலும்
வஞ்சமன மேகி வழக்கொழிவ தெந்நாளோ

51 சித்தர்களும் முத்தர்களும் தேசிகரும் வாழியவே
உத்தமர்கள் சற்குணத்தில் வொன்றிநிற்ப தெந்நாளோ

வெண்பா

அஞ்ஞானம் நீக்கி யருள்ஞான மேசெழிக்க
மெஞ்ஞானக் கும்மியிதை மேதினியில்—விஞ்ஞானம்
கண்டிதமாய்ச் சொன்னேன் கருத்தனே யென்பக்கல்
நின்றுதுணை செய்வாய் நிதம்.

---

1 கும்மியடி பெண்ணே கும்மியடி—ஒரு
கோலங் குறியறக் கும்மியடி
வெம்மாயை யான வினைகளெலாந்—தூர
விரண்டோ யோடுமே ஞானப்பெண்ணே

2 ஆலம்பல கோல மானதாலே—மூட
அஞ்ஞான மாயை கலந்ததாலே
கோலா கலங்கள் மிகவாச்சே—இந்த
கூத்தைக் கடக்கணும் ஞானப்பெண்ணே

3 பாலை வனமான கானகத்தில்—இரு
பச்சைப் புறாக்களுங் கூவுதடி
சோலை மரங்களைச் சூழ்ந்துகொண்டு—நல்ல
சுகிர்தம் பாடுதே ஞானப்பெண்ணே

4 கும்பகோ ணமெனும் கோட்டையடி—ஞான
குண்டலி சத்தியின் மாடியடி
கும்பிடு மன்பர்கள் கோயிலடி—இந்த
கூறு தெரியுமோ ஞானப்பெண்ணே

5 பந்தவினை மயிர்ப்பா லந்தனை—நல்ல
பக்குவஞ் செய்து கடக்கவேணும்
சிந்தை திறையுங் கொடுத்தாக்கால்—சிவ
தெரிசன மாமடி ஞானப்பெண்ணே

6 கந்த னிருக்கின்ற கானகத்தில்—ஒரு
கழுகு நின்றே யுலாவுதடி
பந்தபா சங்களைப் போக்கிவிட்டால்—ஓடிப்
பறந்து போமடி ஞானப்பெண்ணே

7 எட்டுடன் நாலுமோ ரெட்டாக—அந்த
இனத்தைப் பக்குவம் செய்தாக்கால்
பட்டப் பகல்போல மட்டில்லாத—தொரு
பாக்கியம் கிட்டுமே ஞானப்பெண்ணே

8 வாசிக் குதிரை வசமானால்—இந்த
வையக மெங்கு முலவலாமே
ஆசாபா சங்களை நீத்துவிட்டால்—அருள்
ஆனந்த மாமடி ஞானப்பெண்ணே

9 பன்னீ ரிருகாலாம் பந்தலடி—அதைப்
பார்த்த விடமெலாம் பித்தலடி
விண்ணோருங் கண்ணோ டுறவானால்—மிக்க
விமோசனக் தானடி ஞானப்பெண்ணே

10 ஐவர்கள் கூடிய வாலமடி—இது
அற்புத மாகிய ஜென்மமடி
தெய்வத் தியானத்தில் மூழ்கிக்கொண்டால்—குரு
தீட்சை பெறலாமே ஞானப்பெண்ணே

11 அண்டபிண்டங் கொண்ட வாலமடி—அதை
ஆய்ந்துமே தோய்ந்து தெளிவாகி
கண்டு களித்துக் கடத்தேறிஞல்—இந்த
கற்பனை யேதடி ஞானப்பெண்ணே

12 எண்ணுத வெண்ணங்கள் விட்டொழிந்து—ஒரு
எல்லையிலாச் சேவை செய்தாக்கால்
தன்னை யறியுந் தகைமையடி—ஜென்ம
சாபல்ய மாமடி ஞானப்பெண்ணே

13 சொல்லுஞ் செயலு மிறந்ததடி—நல்ல
சுத்த சுகாதீத தேசமடி
அல்லையுந் தொல்லையும் வென்றாக்கால்—வெகு
அற்புத மாமடி ஞானப்பெண்ணே

14 அங்கென்று மிங்கென்று மில்லையடி—சிவம்
ஆனதே யேகம தானதடி
மூங்கிக் குளிக்கும் வகையறிந்தால்—ஜீவ
முத்தர்கள் தாமடி ஞானப்பெண்ணே

15 மாதவம் செய்யத் துணிந்தாக்கால்—துள்ளும்
மாய மனமும டங்கிவிடும்
சாதனை பொருந்த மாளுக்கால்—தீட்சை
தந்தருள் வானடி ஞானப்பெண்ணே

16 ஆசைக் கடலைக் கடந்துவிட்டா—லன்றே
அய்யன் திருவடி தோணுமடி
காசாசைப் பேயை கடத்திவிட்டால்—ஞானங்
கைவல்ய மாமடி ஞானப்பெண்ணே

17 வஞ்சக நெஞ்சகம் மாய்ந்துவிட்டால்—தூய
வல்லோன் கருணையும் வாய்க்குமடி
நெஞ்சமுந் தேறித் தெளிந்தாக்கால்—சுக
நித்திய வாழ்வடி ஞானப்பெண்ணே

18 பெண்டு பிள்ளையாசைப் பித்துகொண்டால்—ஞான
பேரின்ப வீடுமே கிட்டாதடி
பெண்டு பிள்ளைவாசம் வேணுமென்றால்—பாசப்
பித்தை யகற்றணும் ஞானப்பெண்ணே

19 மானிட ஜென்ம மெடுத்தாக்கால்—தன்னை
மானே யறிந்திட வேணுமடி
வீணா ருறவைப் பிடித்தாக்கால்—அந்தோ
வினைவழி யாமடி ஞானப்பெண்ணே

20 பண்டு பழகிய காயமடி—அந்த
பக்குவ சாதனை செய்துகொண்டு
தொன்றாசை மூன்றுந் தொலைத்தாக்கால்—காயச்
சுத்தியு மாமடி ஞானப்பெண்ணே

21 முப்பாழும் பாழாய் முடிந்தாக்கால்—ஞான
மோன சுபாவங்கை கூடுமடி
ஒப்புவமை யில்லா நுட்பமடி—ஏக
உணர் வெளியடி ஞானப்பெண்ணே

22 சத்திய சன்மார்க்கம் சாரவென்றால்—நல்ல
சாதுக்கள் சங்கம் பழகவேண்டும்
உத்தம சீல ருறவானால்—தானாய்
உள்ளந் தெளியுமே ஞானப்பெண்ணே

23 சாதி பேதங்களு மில்லையடி—சாது
சற்ஜன சங்கக் குழாங்களிலே
நீதி நெறியைத் தவராரடி—அன்பாய்
நேசித்து வாழலாம் ஞானப்பெண்ணே

24 போகாக் கவலையும் போக்கிவிட்டு—பொறி
புலன டங்கி யிருந்தாக்கால்
சாகாமற் செய்த சற்குருவைத்—தினம்
சார்ந்து கொள்ளலாம் ஞானப்பெண்ணே

25 பாடான பாடுகள் பட்டாலும்—பாவப்
பாச வினைகளைப் போக்கவேணும்
மூடவஞ் ஞானந் துறந்தாக்கால்—நல்ல
மோட்ச மாமடி ஞானப்பெண்ணே

26 சச்சிதா நந்தமுந் தானுனல்—பொல்லாச்
சாபமுந் தீர்ந்து வொழிந்திடுமே
தக்ஷிண மூர்த்தியின் தாளிணையே—உய்யும்
சாயுஜ்ய மாமடி ஞானப்பெண்ணே

27 கண்ணுன கண்ணுங் கருத்தானுல்—லோக
கற்பனை யெல்லாம் கரைந்திடுமே
தன்னுனே நன்னுனே தானுனே—தன்னில்
தானன்றி வேறிலை ஞானப்பெண்ணே

28 உந்திக் கமல மடல்மலர்ந்தால்—மேலே
ஓங்கார ரீங்கார நாதங்களாம்
சந்திக் கமலமும் பூத்தாக்கால்—தெய்வச்
சன்னிதி தோணுமே ஞானப்பெண்ணே

29 வஞ்சிய ராசையை விட்டொழிந்து—காம
மயக்கை வென்று வழிகடந்து
அஞ்சாமல் மூவாக்கை நீக்கிநின்றால்—தன்னை
யறியுந்தி றமையாம் ஞானப்பெண்ணே

30 பாச வலையைச் சுமந்துகொண்டு—மோகம்
பாரெங்கும் சுத்தி யலையுமடி
நீசத் தனத்திற் கிடங்கொடுத்தால்—பெரும்
நிந்தனை யாமடி ஞானப்பெண்ணே

31 சொப்பன சாக்கிரந் தொல்லையடி—அப்பால்
சூன்ய சுழுத்தியு மல்லவடி
தப்பான முப்பாழைத் தாண்டிநின்றால்—உயர்
சைதன்ய ராமடி ஞானப்பெண்ணே

32 புண்ணிய பாவம் பொருந்தாமல்—நல்ல
பூஜா பலன்களைச் செய்தாக்கால்
அன்னிய மெல்லாம் விரண்டோடியே—சுத்த
அத்வைத மாமடி ஞானப்பெண்ணே

33 ஞானச் சபையினிர் நம்புதாளை—வாசன்
ஞானக்கொடி மஸ்தான் பாடுங்கும்மி
மானுபி மானமுந் தாண்டிநின்றால்—நன்மை
வாய்த்திடும் காத்திடும் ஞானப்பெண்ணே

தேவாமிர்த இன்சொற்கள்

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—சாப்பு.

பல்லவி.

நெஞ்சமே அல்லா(ஹுூ)வென்று நினைவாய் நித்தியமே

அனுபல்லவி.

பஞ்சபூதப் பேதாபேத மறிவாய் நிச்சயமே (நெ)

சரணம்.

1 பஞ்சமாப் பாதகங்கள்
பாரில் பொல்லாதே—அதை
அஞ்சி விலகிக்கொண்டா
லணுவு மில்லாதே (நெ)

2 கள்காமம் கொலைகளவு
பொய்யுரை யாதே—அந்தத்
தொல்லையிலே சிறைபுகுந்து
துயரப் படாதே (நெ)

3 வட்டிவாசி வாங்கிவயிறு
வளர்க்க யெண்ணாதே—மார்க்க
சட்டசபைத் தீர்ப்புநாளில்
பட்டுக்கொள்ளாதே (நெ)

4 பாலைவனப் பார்வைப்பக்ஷி
பரத்தையர் நாரி—சோர
மாலையிலே மாட்டிக்கொண்டு
வேணோ வொப்பாரி (நெ)

5 மும்மலச் சேற்றுக்குழியில்
காலைவைக்காதே—அந்தோ
அம்மலப் பாசவலையில்
சிக்கிக்கொள்ளாதே (நெ)

6 ஆசாபாச மற்றவரை
தூச னிக்காதே—பெருந்
தோசமென்றே வேதாந்தங்கள்
கோசிக் கின்றதே (நெ)

7 மானிடராய்ப் பிறந்து மறிவு
ஞானமில்லையோ—புவி
வீணான விடக்கையுண்ண
வெட்க மில்லையோ (நெ)

8 வாழுகிறோ மென்றுவழக்
கோரம் பேசாதே—அது
ஏழாம்நரகுக் கிட்டுசெல்லு
மிபுலீசின் றாதே (நெ)

9 வஞ்சியரின் சூதுவாதில்
கிட்டக் கூடாதே—வெறி
கஞ்சாவபின் வர்க்கமுண்டு
கெட்டுப் போகாதே (நெ)

10 அறிஞர்களின் சகவாசத்தை
யுறவு செய்வாயே—இறை
அருமறையின் ரகசியத்தைக்
கேட்டுணர்வாயே (நெ)

தேவாமிர்த இன்சொற்கள்

1 வேதம் என்பது ஆன்மலோகத்தை நிரூபிக்கும் திவ்விய நந்தாவனம். அநுபவ ஆராய்ச்சி மேடையிலேறிய மகாஞானிகளே அண்மையில் பயன் பெறுகின்றனர் ஏனையோர்கள் ஏட்டுக்காவடி வாகனர்.

2 புரவுலகைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்க்கின்றோம். அகவுலகை சுருதி யுக்தி அநுபவ அநுமானத்தால்தான் பார்க்க முடியும்.

3 விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் உனக்கு சத்துரு உண்டா? இலவே இல்லை! உனது மனதில் எழும் தீய எண்ணங்களே உனக்குக் கொடிய சத்துரு. அவை எழவே அவைகளை நசித்து நாசஞ்செய்துவிடு சர்வ வெற்றியும் உனக்கே.

4 உற்ற சிநேகிதனோடு வெகு உல்லாசமாய் நடப்பது போல் சற்குருவின் கருணைக்கிணங்கினால் சச்சிதானந்தம் தானாய் லபிக்கும்.

5 காலக்கிரமத்தில் கானகத்தில் உனக்கு தனித்திருக்குந் தன்மை யேற்பட்டாலும் கல்வியே உற்ற சிநேகிதனாகும். ராஜ ஆக்கினை நேரிட்டாலும் ஜெயித்து வெற்றி தரும்.

6 உலகத்தில் எவன் எதை ஆசைவைத்தானோ அதை முற்றிலும் மறந்துவிடுவதே அதைப்பெறுவதாகும் அல்லேல் துன்பமே நேரிடும்.

7 சப்த, பரிச, ரச, கந்த, ரூப மெனும் அவாவின் தடிப்பேறி கடவுளுக்கும் உனக்கும் திரைபோட்டுக்கொண்டாய். விடுதலைக்கு வழிதேடு.

8 இரத்தினம் இன்னதென விளங்காத தேசத்தில் மலைமலையாக விளைந்தாலும், அங்குள்ள மனிதருக்குப் பிரயோசனமற்றதாகும். அதற்குரிய ராஜாக்களும் கோடீஸ் பரர்களுமே அணிந்து மகிமைபெறுவர்.

9 கல்வி அறிவின் மகிமை விளங்காத தேசத்தில் மகாஞானிகள் உதயமானாலும் அன்னவர்களால் சாமான்ய ஜனங்கள் பிரயோஜன மற்றவர்களாகின்றனர். பரத்தாசை யுடைய (மூமீன்) முமூச்சுக்களோ வென்றால் ஆயிரம் மைல் தூரமானாலும் தேடிச்சென்று ஆன்மவிடுதலை பெறு கின்றனர்.

10 கடவுளிடத்திலும் மூர்த்திகளிடத்திலும் உனக்கு அதிகம் அன்புஉண்டா? ஆம்! அங்ஙனமாயின் உன் உடலை யும் உள்ளத்தையும் கலந்துங் கடந்து நிற்பதே அன்பின் லக்ஷியமாகும்.

11 நீ பிறப்பதற்குமுன் எத்தன்மையாயிருந்தாயோ அதை யிதேசமயம் கவனி. உனது பூர்வஞானம் வெளி யாகும்.

12 நாம் பிறப்பதும் இறப்பதும் நமது மந்தப்புத்தியி னாலேயே ஏன்? விளங்கவேண்டியதை விளங்கி, வணங்க வேண்டியதை வணங்கினால் பிறப்பிறப்புக் கேதுவேது?

13 உனது நிஜஸ்வரூபத்தை செத்தபின்பு பார்ப்போ மென்று ஏமாந்துபோகாதே. அது பகற்கனவு. காற்றுள்ள போதே தூற்றிக்கொள். கருத்துள்ளபோதே கண்டுகொள்.

14 ஏ! நபுசே. நெஞ்சில் நெருப்பில்லாத நீ எவ்வளவு வணங்கியுமென்னே? உனது கௌரவப்பிரிய கபடநாடக மன்றோ! ஆத்மீக வுணர்ச்சியில் பிரியம் இல்லைபோலும். ஒரு சிறிதளவு நெஞ்சில் நெருப்பிருந்தால் கடவுளின் இதோபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தில் ஆழ்ந்த சமாதியில் மூழ்கிவிடுவாயல்லவா?

15 தான்செய்யும் குற்றத்திற்குக் கடவுளிடத்தில் மன்னிப்புக் கேட்பதைவிட தன்னைத்தானே மன்னித்துக் கொள்வது ஆயிரமாயிரம் பங்கு விசேஷம் எப்படி? பஞ்ச மாப் பாதகங்களை அகத்திலும் புறத்திலும் மனமொத்து அடியோடு நிறுத்திவிடுவது மேலல்லவா?

16 சிலமனிதர்கள் படித்தும் கேட்டுமிருப்பார்கள், ஆனால் சரீரஇச்சையிலேயே ஊறிக்கிடக்கின்றனர். ஏன்? அதையே சுவர்க்கமாகத் தெரிந்துகொண்டது அவர்கள் அறியாமையே. பரத்தாசையுடைய மகத்துக்கள் இவ்வித அனுச்சாரத்தை தலைஎடாவண்ணம் இதயாம்பரத்தைக் காத்துக்கொள்வார்கள்.

17 சிலதாழ்த்தப்பட்ட மிருகங்களுக்கு அசூசியான சேற்றுக் கிடங்குகளிலேதான் இன்பசுக மிருப்பதாகத் தெரிந்துகொண்டது. உயர்தர மிருகங்களுக்கு அந்த வாடையும் பிடிப்பதில்லை. அதுபோன்று உயர்மக்கள் யார்? தாழ்ந்த மக்கள் யார்? என்று அறிவுடையோர் பிரித்தறிவர்.

18 கடவுளைத் தேடியடையவோ, தேடாதிருந்து விடவோ, என்பதை நினைக்குந்தோறும் எமது உணர்ச்சி

மயங்குகின்றனவே? ஏனெனில் குறைவற்ற குணியை எங்குதேடியலேவது என்றும் குறைபடப் பிறந்துழலும் சிருஷ்டியாகியயாம். எதார்த்த பூரணத்தன்மையைத் தேடாதிருப்பதற்கு என்ன காரணம் சொல்லப்போகின் றோமோ என அடிக்கடி அறிவுச்சுரங்கத்திலிருந்து தந்தி விரைவுகின்றன. இதையறிந்த உணர்வு நிம்மதியாய நிசப்த மாய் இருக்கின்றன.

மெய்ஞ்ஞானத் திறவுகோல் சம்பூரணம்.

ஞானிகளின் இதோபதேச விமர்சனம்.

இறையைப் புணர்ந்தோ ரிதோப தேசவுரைப்
பறையை யுணர்ந்தே பரசுகத்தைக் கொண்மினின்றே

(வஹுவ மஅகும் அய்னமா குன்தும்)
(அலாஇன்னஹுபி குல்லி ஷையின் முஹீத்துன்) [தலீல்]

தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா வின்பனமக் காவானும்—எந்தமுயிர்
தானகு வானும் சரணகு வானுமருட்
கோனகு வானுங் குரு [ஞா-தி]

சர்வமகா மந்திரமு முபதே சிப்போர்
சாமான்ய குரவரெனச் சாற்ற லாகு
மிருமையிலாப் பரப்பிரம நீயே யென்றிங்
கிணையற்ற வுபதேசஞ் செய்கின் றோனே

பெருமைமிகுஞ் சற்குருவென் றுறைக்க லாகும்
　　பின்வெகுவாய்ப் பேசுவதாற் பெறும்பே றென்ன
வரியபர நீயென்போ னுசா னுனே
　　னகம்பிரம மெனவறிவோன் மானு னுனேன்

ஆதலினுற் பரப்பிரம நீயே யென்றிங்
　　கருள்பவனே யாசிரிய னெனவே யோர்ந்து
சாதகமாஞ் சற்குருவி னுபதே சத்தைச்
　　சத்தியமா நம்பியதைச் சாதிப் போனே
பேதமிலா வகண்டபரப் பிரம ஞானம்
　　பெற்றதனுற் பவபந்த மனைத்துந் தீர்ந்து
போதகன மானபர வடிவே யாவன்
　　புகன்றதிலோ ரணுவேனு மைய மில்லை

அகண்டபரப் பிரமத்துக் கயலே யில்லை
　　அகிலமுமவ் வகண்டபரப் பிரம மென்று
மகண்டபரப் பிரமமது வகமே யென்று
　　மகமந்த வகண்டபரப் பிரம மென்று
மகண்டபர பாவனையே திடமாய்ச் செய்திவ்
　　வயலணுவுந் தோற்றுமற லழிந்த பின்பவ்
வகண்டபர பாவனையுஞ் செயாது தள்ளி
　　யானந்த வடிவாக வமர்ந்து நிற்பாய்

நிற்பதெனுந் தன்மையுமே யிழந்த பின்னர்
　　நீயா யிருக்கின்ற சுபாவந் தன்னைச்
சொற்பமுமே வாக்காலு மனதி னுலுஞ்
　　சொல்லவொணு தெண்ணவொணு தாத லாலே

தற்பரமாஞ் சகசநிலை சார்ந்த பின்னர்
தான்றானே தானாகத் தனித்தி ருப்பா
யற்பமுமே விகற்பமிலா வவ்வி ருப்பை
யறைந்திடவு நினைந்திடவு மார்தான் வல்லோர்

என்னிடையே கற்பிதமாய்த் தோன்றா நின்ற
வீசசெக சீவரெலா மென்னை யன்றிப்
பின்னமதா யொருக்காலு மிலவே இல்லை
பிறங்கியவச் சீவேசுர சகத்த னைத்தும்
மன்னுபரப் பிரமமதா நானே யென்று
மயக்கமற வறிந்ததனுன் முத்த னுவாய்
சொன்னதிலோ ரையமிலை சத்தி யந்தான்
சுந்தரமாஞ் சிவனாணை யுண்மை சொன்னேன்

சர்வபரி பூரணமா மான்மா வன்றிச்
சகசீவன் முதலியவை யணுவு மில்லை
பரவுசக சீவபர மனைத்து மென்றும்
பராபரமாம் பரமான்ம சொரூப மேயாம்
திரமதுவா யுரைசெய்த விவ்வர்த் தத்திற்
றினையளவு மையமிலைச் சத்தி யந்தா
னுரைதருமிவ் வர்த்தத்திற் றொருக்கா லேனு
முரமாகக் கேட்டுணர்வோன் பிரம மாவான்

பூதமொடு பௌதிகமும் மானே நானே
புவனமுறும் பொருளெவையும் மானே நானே
பேதமுறு முலகமெலா மானே நானே
பிரமாண்ட கோடிகளு மானே நானே

சாதமுறு மெய்ப்பொருளு மானே நானே
சகசீவ பரங்களெலாம் மானே நானே
ஓதுபல வுபாதிகளு மானே நானே
உபாதியிலா வுண்மையுமா யானே ஞானே.

ஆகமிலா வறிவுருவாம் பிரம நானே
யநுகூத மானபரப் பிரம நானே
மோகமிலா வறிவுருவாம் பிரம நானே
முத்தாப ரகிதபரப் பிரம நானே
பாகமிலா வறிவுருவாம் பிரம நானே
பரிச்சேத ரகிதபரப் பிரம நானே
சோகமிலா வறிவுருவாம் பிரம நானே
சுயஞ்சோதி யானபரப் பிரம நானே.

தன்னிடையே தானுக விளங்கா நின்ற
தற்பரமாம் பரப்பிரமந் தானே யென்று
பின்னமிலா வறிவுற்றுப் பிரமா காரம்
பெற்றவனே பிணிப்பற்ற சீவன் முத்தன்
அன்னியமே யில்லாத வான்மா வின்கண்
அமர்ந்தாங்கே ரமிப்போனே யகண்ட மான
தன்னிடையே தானுகத் தனித்து நின்று
தன்னின்பம் புசிப்பவனே சீவன் முத்தன் (ரிபு)

அருமையாம் விசாரத் தாலு மாப்தவாக் கியத்தி ஞலும்
ஒருமையா யிருக்கும் பிரம முள்ளத்தி லுதிப்ப தாகும்
தரணியிற் கோடா கோடி தாதனை விளையாட் டாலும்
மருவிய மாயை தானே மாறுவ தென்று மில்லை

உருமையாய் விளக்கக் கூட்ட உதித்தொடுங் குதலில் லாத
பரவிய மனது வாக்கால் பகுத்துரைக் கவொண் ணாத
அருமையா மாதி யந்த மல்லாத அகண்ட மான
பிரமமே யெல்லா ருள்ளம் பிரிதற மிளிர்வ தாமே

வெளியென்றே வேதாந்தம் கடந்து ரைத்தும்
விளக்கிருக்கத் தீத்தேடு மடமை போல
ஒளிவான வுணருருவாய் நாமி ருக்க
உள்ளமதை பரமாக்கி யதைவே றாக்கி
பிளவுபட்டு மனமுருகில் மாயை போமோ
பேசாத யிடம்பிரம ஞான மென்றும்
அளவிலா வந்தநிலை நீதா னென்றும்
அருட்குருவு மறைந்தாரே ஐயம் போக்கி

மகிழ்வா யடைந்து குணமுங் கடந்து
மனமு மிறந்த வெளியே
அகமென் றுணர்ந்து மறையும் புகன்ற
யமைவே மிகுந்த பொருளிற்
சுகமா யிருந்து மயலுந் தொலைந்து
தொழிலேது மின்றி முடிவாய்
நிகழ்வான போது ஜகமும் மறைந்து
நினைவொன்று மின்றி யுணர்வாய் (சி. வி.)

எத்தனை யுகம தாக வென்னசித் தாடி னாலும்
பித்தினில் மருளத் தோன்றும் பிரமையே யுலகு போல
அத்தியா ரோப மாக வருமறை வேத மோதும்
முத்தியை யடைவா யானல் முழுதுமே தெரியும் நெஞ்சே

மறைமுடிவா முணர்வெளியே யுள்ள தென்றும்
மற்றதெலா மாயையனிர் வசன மென்றும்
அறையுமந்த வனிர்வசனத் தியல்பா ராய்ந்தே
ஆன்றோரு மழிவில்லாப் பிரம மானார்
இறையுருவ முலகுருவம் புறத்திற் றோன்றும்
இனிமையா மறிவொன்றே யகத்த தாகும்
நிறைவான அறிவுமய மொன்றே யென்றும்
நிலைத்ததனால் நீயதுவா யுணர்வாய் நெஞ்சே

சென்றுமே யருட்குருவை யடைந்து நீதான்
தெளிவாக வுபதேச முணர்வா யானால்
என்றுமே யிருந்தபடி யிருப்ப தான
விவ்வறிவே யுனதுநிச வுருவாம் வேறிங்
கொன்றுமே யெப்பொழுது மில்லை யென்று
மோதியநூல் முடிவறிந்து திடமாய் நின்றால்
அன்றுதா னுனதுருவம் வெளியாய்த் தோன்றி
யமைதியா யிருந்தசுக மறிவாய் நெஞ்சே [அ.நெ.வு.]

ஏற்றிடத் தக்கது ஞானமொன் றேபுற வெவ்வகையும்
மாற்றித் தனதுரு வாக்கிச் சுயமாய் வயங்குவது
தேற்றிடு நானெனல் ஞானம தாகத் திரிபகற்றித்
தோற்றிடு ஞானவிண் ணேமய மாயெங்குஞ் சோதிக்கினே

இறந்தது யாது பிறந்தது யாதிங் கெனுமயக்கம்
அருந்து தனித்திடச் செய்தல் விசாரணை யாதலினால்
திறந்தெரிந் தாயிடில் சித்தப் பிறுந்தி சிறிதுமின்றி
அறம்பொரு ளின்பம் வீடுமொன் றாகிடு மக்கணமே

அண்டபிண்டம் யாவு மறிவாக் கரைதலினல்
அண்டபிண்டம் யாவு மறிவுருவே—அண்டபிண்டம்
ஆவதுவே பந்த மழிவதுவே முத்திநெறி
ஆவதழி வல்ல அறிவு

நானெனற்கு மெய்வடிவம் ஞானமே வேறில்லை
ஏனையவை பொய்வடிவம் ஈங்கழியும்—ஞானமதைக்
கண்டதுவா நின்றக்கால் காணுமோ சாவச்சம்
பண்டுருத்தா ஞகியதால் பண்பு

அதுநானென் ருகும் அனுபவமீ தூர
அதுநழுவி நானதுவாம் அப்பால்—எதுவுமல(து)
ஆகிமன வாக்குக் கடங்காது நிற்பதுதான்
ஆகுநிலை முத்திமுடி வாம் [ஞா-தி]

—

ஏதேது வந்தாலு மேதேது செய்தாலு
மேதேதி லின்புற் றிருந்தாலும்—ஏதேதுந்
தானுகா வண்ணந் தனியே தெரிந்திருக்கும்
ஞானுகா ரந்தானே நாம்

சாயைஎனும் வாழ்குடும்பந் தன்னைச் சுமந்தாலும்
மாயைஎன்னும் மேக மறைத்தாலும்—தூயவொளி
தானய் விளங்கிச் சகசாக்ஷி யாயிருக்கும்
ஞானுதித் தன்றனே நாம்

என்னையே யல்லாமல் யான்பெற்ற தேதுமில்லை
என்னையான் பெற்றிருந்த தெப்போதும்—என்னையன்றிப்
பந்தமுத்தி யில்லையால் பார்க்கிலிவை யாராயுஞ்
சிந்தனையு மில்லாத தே

ஏதுவர வேண்டு மதுவருக வென்னைவிட்
டேதகல வேண்டு மதுவகலக்—கோதென்று
பிச்சையுந் தள்ளேன் பிரமபத மும்வேண்டே
னெச்செயலு நாணுகி னேன் (சொ. சா.)

ஈசன்வே றியான்வேறென் றெண்ணுகின்ற பாதகரை
நீசரெனக் கண்டு நினையென்றான்—ஆசையொடும்
வேத முடிவறிந்த வேதியரைக் கூடென்றான்
பேதமில்லை யெல்லாம் பிரி (சி. வ.)

ஐயன்குணங் குடியானை யன்றிவே றுண்டென்று
ளாய்ந்து பார்த்தேன்
ஐயன்குணங் குடியானை யன்றிவே றொன்றுமென்னு
ளாயக் காணேன்
ஐயன்குணங் குடியானே யானேயென் றறிந்தபின்யென்
னறிவாய் நின்ற
ஐயன்குணங் குடியானே யதிமோகத் திருநடன
மாடு வானே

ஓடி யலைந்துமில வையக முற்று முழன்றுழன்றுந்
தேடி யெடுத்த திரவியம் யாவையுஞ் செத்தபின்பு
நாடி யெடுப்பது முண்டோ மறந்து நடக்குநெஞ்சே
வாடி யிறந்தறஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே

ஆடும் படுபொரு ளாட்சியென் றங்கிங்கு மாயலைந்து
பாடும் படுவதுன் பாரம தோசொல்லு பாழ்மனமே
கூடும் படுபயன் றேடுமப் பாலுள்ள கூட்டம்விட்டு
வாடும் படும்பெறு முண்மைக் குணங்குடி வாய்த்திடுமே

அய்யோ வுலகி லழியா வரம்பெற்றி யாரிருந்தார்
அய்யோ வுனக்கந்த வாதர வென்னகி லாசையென்னே
பொய்யான வாழ்வும் புலேயாட்டு நம்பும் புதரலர்க்கும்
ஒய்யார முள்ள குணங்குடி யாற்கு முறவில்லேயே

உற்று ரிருந்தென்ஃனப் பெற்று ரிருந்தென் னுனக்குதவி
சற்று யினுமில்லே சொன்னேன் சொன்னேனிது சத்திய
[மாய்ச்
செற்றூனும் வைத்தடி வாங்காம னிற்கிற் செயம்பெறலாங்
கற்றுற் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே
[மலிக்குல் உலமா குணங்குடிவள்ளல்]

அகரமோ ராறு கோடி மடாலயம் அனந்தங் கோடி
சிகரமோ ராறுகோடி செய்தவப் பலன்க ளெல்லாம்
மகரகே தனனே வென்ற மாதவ ரடியார்க் கன்னம்
பகுரவே கனவு கண்ட பலனுக்கும் ஒவ்வா தன்றே.

சீவன் முத்தர் இயல்பு

தீரராய்ப் பிரம வித்தாய்த் தெளிந்தவர் தெளியு முன்னர்
வாரமா யிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமா ஞலும் பலர்க்குப கார மாக
நேரதாச் செய்வார் தீர்ந்த நிலேவிடாச் சீவன் முத்தர்

காமமா திகள்வந் தாலுங் கணத்திற்போ மனத்திற் பற்றூர்
தாமரை யிலேத்தண் ணீர்போற் சகத்தொடுங் கூடிவாழ்வார்
பாமர ரெனக்காண் பிப்பார் பண்டிதத் திறமை காட்டா
ரூமரு மாவா ருள்ளத் துவகையாஞ் சீவன் முத்தர்.

பேதகன் மத்தால் வந்த பிராரத்வ நாநா வாகு
மாதலால் விவகா ரங்க ளவரவர்க் கான வாகு
மாதவஞ் செயினுஞ் செய்வர் வாணிபஞ் செயினுஞ் செய்
பூதலம் புரப்ப ரையம் புகுந்துண்பர் சீவன் முத்தர் [வர்

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
னின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுது வீழ்ந்தும்
பொன்றின சவம்வாழ்ந் தாலும்புதுமைபா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சீவன் முத்தர்
[கைவல்யம்]

அரியணையி லிருந்துலக வரசாட்சி புரிந்தாலும்
அங்கை யேற்றுத்
தெருவுதொறுந் திரிந்திரந்து தின்றாலு மிளம்பருவத்
தெரிவை மாரைப்
பிரியாம லிருந்தாலும் பிரிந்துதவம் புரிந்தாலும்
பேசிற் றெல்லாம்
விரிசீவன் முத்தனுக்கிங் குடன்பாடே யன்றியொன்றும்
விரோத மின்றே [சி. ஞா. வ]

தன்னையுந் தனக்கா தாரத் தலைவனை யுங்கண் டானேற்
பின்னையத் தலைவன் றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிவா யாகி லுனக்கொரு கேடுமில்லை
என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே
[கைவல்யம்]

(ஹஜ்ஜு) இதயசுத்தி

கட்டளைக் கலித்துறை

இன்ன மறிந்திடு விக்கண்ணின் பார்வைக் கிமைதிரைபோல்
சொன்ன ஷஹாதின் றிரையாந் துனியா பராக்க
[தெல்லாம்
வன்ன கியாலுக் கிமைதிரை யாகாத வாறதுபோல்
மன்னன் மஃரிபத் துக்குத் திரையாகா மன்பராக்கே

உலகாசை யற்று வுலகின் பராக்கை யொழித்துவிட்டு
பலவஸ்து மேல்வைக்கும் பாழாசை யெல்லாம் பரிகரித்து
அலையு மனதை யலைய விடாம லடக்கிகின்றேன்
வலஞ்செய்து வாகல்பை மாறுமல் றப்பி னருள்பெறவே

கல்பது கைவச மாகிவிட்டால் ஹஜ்ஜுல் அக்பருவாங்
கல்பது ஆயிரம் கஃபாவைக் காணவு மேற்றமதாங்
கல்பதை வித்தென் றுகண்டுகொள்மற்ற தெல்லாந்தளையாங்
கல்ப துயிருக் குயிராகு மேயிளங் காரிகையே

எந்தகல் பானுற் றனையுக் தலைவனை யும்மிதமாய்ச்
சொந்தம தாக வறிந்தொன்று பட்டுத் துசிகரமாய்
இந்த வுலகாசை யற்றிறை யாசைகொண் டேயிலங்கும்
அந்தகல் பானதை நாமுரைத்தோமென் றறிந்துகொள்ளே

கண்டுகொள் கட்டிட மாம்கஃ லுல்லாவால் கஃபதுல்லா
பண்டுள்ள நாயனுற் பாரகல் பானது கட்டிடமாங்
தொண்டர்கள் யாவுஞ் சுஜூதுசெய் யுந்துகை யாந்தலமாம்
அன்றுமின் றென்றுமே யாதி யிருப்பிட மாகுமதே

அறிந்துகொள் ஹக்கது நீயாயிருக்க அறியாமலேன்
மறந்துபோய்த் தேடுகிருய் வல்லோ னிருப்பிட
[மெங்கோயெனத்

திறந்துனைத் தானே தெரிசன மாகத் தொகுத்தறிந்தால்
மறைந்த இலாஹை மறையாமற் பெற்று மகிழ்ந்துய்வையே
[மெய்ஞ்ஞானத்தெளிவு]

பழக்கங் கொடியதுபார் பாறையினுங் கோழி
கிழிக்கும் பொலியைக் கிளறும்—விழித்துங்
குருடர்க் கொளிபகையாய்க் கூசிக்கோல் போடா
ரருளைப் பகுக்குமான் மா.

கண்மணியி னாகாய நீழல் கலந்தாற்போ
லுண்மையைநீ யுண்டென் றெனையுணர்த்தித்
—துண்ணெனவே
பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானை நாம்பரவி
தோத்திரஞ்செய் யாப்பிறவாச் சொல் [ஒழிவிலொடுக்கம்]

பெரியாரின் பொன்மொழிகள்

1 இருலோக யோசனைகளையும்விட்டு விலகியிரு. ஏனெனில் எண்ணமாகிய அலைகள் கிளம்புமாயின் அவை மனக்கண்ணாடியை மாசுபடுத்தும். [காஜா மீர்தர்த் (ர)]

2 அப்பியாச ஔடதத்தைப் பூரண ஞானாசிரியரிட மிருந்து பெற்றுக்கொள். ஏனெனில் மனிதனுக்கு மடமையைவிடக் கெட்டநோய் வேறொன்றில்லை.
[ஷெய்குஸ அதிஷீராவஸீ (ர)]

3 நீ உனது சகோதரனுடன் சண்டையிடாதே. மேலும் அவனுக்கு வருத்தம் உண்டாகும் அளவுக்கு கேலி செய்யாதே; இன்னும் அவனுக்கு வாக்குறுதி கொடுத்து அதற்கு மாற்றஞ் செய்யாதே. [ஹதீதுஷரீப் (திர்மதி)]

4 வாக்குறுதியை நிறைவேற்றக் கற்றுக்கொண்டாயானால் மிகச்சிறப்பாயிருக்கும். இல்லையெனில் உன்னைக் காண்போர் யாவரும் உன்னை அநியாயக்காரன் என்றே தூற்றுவர். [காஜாஹாபிஸ் (ரஹ்)]

5 சிந்தனைவல்லபர் வெறுந்தோலின்மேல் மயங்கி மனதைப் பறிகொடார். எந்த மூடனாவது அவ்வாறு

கொடுப்பானாயின் அவன் மூளையில்லாத வெறும் மாமிச சாதியாகின்றான். [ஷெய்குஸ அதிஷீராவஸி (ரஹ்)]

6 யான் திவ்விய தெய்வலோக நந்தாவனத்திலுள்ள பறவையாக இருந்தேன். அதைவிட்டுப் பிரிந்து இந்தப் புதிய சுரங்கப்பிரதேசத்தில் எப்படி வந்து விழுந்தேன் என்பதை என்னால் விவரிக்க முடியவில்லை.

7 இப்பாழும் சத்திரத்தைவிட்டு என்று விலகுவேனோ, என்று ஆத்ம சுகத்தைத்தேடுவேனோ, அந்நாள் தான் எனக்கு நன்னாள். [ஹாஜா ஹாபிஸ் (ரஹ்)]

8 துன்பத்தையும் இன்பத்தையும் ஆதாரமாகக் கொண்டே இவ்வுலகம் தவறாக முடிவுகட்டுகின்றது. யாரிடம் என்ன நடக்கின்றதென்பதை இறைவன் ஒருவனே நன்கு அறிவான். [விஸானுல் அஸர் அக்பர் மர்ஹூம்]

9 புரட்சிகளாகிய சூறாவளிக்காற்று இருலோகத்தையும் சூறையாடிய போதிலும், நாங்கள் எங்கள் விழிகளாகிய விளக்குகளுடன் பாட்டையில் நேசனை எதிர் பார்த்தவண்ணமே நிற்போம். [காஜா ஹாபீஸ் (ர)]

10 மனமே! ஆராய்ந்து உண்மையைக்காணும் கண்ணால் நீ நோக்குவாயானால், இடாம்பீக வாழ்வினை விடுத்து எளிய வாழ்க்கையைக் கடைப்பிடிப்பாய்.

[ஷெய்குஸ அதி (ரஹ்)]

11 முயற்சி என்னும் சரட்டில் பெலங்கொண்ட மட்டும் முறுக்கேற்றுக. ஏனெனில் கயிற்றேணி அற்றுப் போகுமாயின் உனது நாட்டமென்ற கோபுரத்தின் உச்சியில் உன்னால் போய்ச் சேரமுடியாது.

[மௌலானா ஜாமீ (ரஹ்)]

12 ஜனங்களோடு வார்த்தையாடுவதில் நின்றும் நாங்கள் நாவையும் முகத்தையும் திருப்பிக்கொண்டோம். ஏதேனும் வார்த்தையாட அவசியம் இருக்குமாயின் அது உற்ற தோழரோடு இருக்குமேயன்றி அன்னியரோடு இராது. [ஷெய்குஸ அதி (ரஹ்)]

13 வாசனை என்னும் சூத்திரத்தில் கோர்க்கும் நிறைந்த குற்றங்களாகிய நீண்ட பாசிமணி வடங்களை சாரா மலிருக்கின்ற மனதையுடையவர்களைக் கூற்றுவன் நெருங்கான்.

14 இராகத் துவேடமென்கின்ற நஞ்சானது பெருக மனமென்கின்ற புற்றில் லோபமென்கின்ற சர்ப்பமானது வந்து நெருங்கிப்புசியாத ஞானவான்களைக் கூற்றுவன் நெருங்கான். [புசுண்டயோகி]

15 தன்னுதவியுள்ளவன் தேவருக்கும் மனிதனுக்கும் இனிமையாகின்றான். அவனுக்கு எல்லாக் கதவுகளும் திறக்கப்படுகின்றன. எல்லா நாவுகளும் அவனை வரவேற் கின்றன. எல்லாச் சிறப்புகளும் அவனுக்கு முடிசூட்டு கின்றன. எல்லாக் கண்களும் அவனையே விரும்பிப் பின் பற்றுகின்றன. (ஒரு பெரியார்)

16 பூலோகத்தில் (பக்கீர்) சந்நியாசி, சாதுசங்கப் பழக்க சகவாசத்தைத்தவிர பிரிதொருயின்பம் இலவே யில்லை; அவர்களே வணக்கவாளி; பிரமசைதன்யர்; சக்ர வர்த்திகள். [அபூமதனவி]

விளம்பரம்

"அமர வாழ்க்கை அல்லது ஆத்ம தரிசன"
மெனும் வேதாந்த நூல், எளிய இனிய செந்தமிழ் நடையில் வசன ரூபமாய்ப் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. சுமார் முப்பது அத்தியாயம். 250 பக்கங்கள் கொண்டது. விரைவில் வெளிவரும்.

மெய்ஞ்ஞானத் திறவுகோல் கிடைக்குமிடம்

கா. நெ. கா. மு. அன்பிரதர்
ஜவுளி வியாபாரம், "நியூ பாரீஸ் ஹால்"
93-94 அம்மன் சன்னதி மதுரை.

பி. கா. மு. முகம்மது யூசுப்
மளிகை & ஷாப் வியாபாரம், "கல்வத்தியா ஸ்டோர்ஸ்"
மெயின்ரோடு நம்புதாளை P. O.
ராம்நாட் ஜில்லா.

ம. அ. சேகுதாவுது
426 நிர். கடை திமிரிக்காசாய ரோட்,
வாராம்பிட்டி, கொளும்பு.

தூ. கி. அ. அப்பாஸ்கான்
26 நிர். கடை அவிசாவலை ரோட்,
வெள்ளாம்பிட்டி, கொளும்பு.

இப்புத்தகம் கிடைக்குமிடம்.

கா. மு. முகம்மது ஸக்கரியா,
126, நாகலகம் ஸ்டிறீட்,
கிராண்ட்பாஸ், கொழும்பு.

கா. நெ. கா. மு. & பிரதர்,
கைத்தறி நெசவுத் தொழிற்சாலை,
பஜார் ஸ்டிறீட்,
தொண்டி P. O.
ராம்நாட் ஜில்லா.

ஸ்ரீமத்: ஞானக்கொடி பாவா,
"கல்வத்தியா ஞானச்சிரமம்"
நம்புதாளை P. O.
ராம்நாட் ஜில்லா.